உ

அழகியற் கல்வி

# பரத நாட்டியம்



★ அடிப்படை அறிவும் ★ ஆரம்ப விளக்கமும்

ஆசிரியர்:

நாட்டியக் கலைமணி

திருமதி யசோதரா விவேகானந்தன்

வெளியீடு:

கமலாவதி பிரசுரம்

சரசாலை - சாவகச்சேரி.

791
விவேகா
SL|PR

உ
சிவமயம்

அழகியற் கல்வி

# பரத நாட்டியம்

(அடிப்படை அறிவும், ஆரம்ப விளக்கமும்)



ஆசிரியர்:
நாட்டியக் கலைமணி
**திருமதி யசோதரா விவேகானந்தன்**
ஆசிரிய ஆலோசகர் (பரத நாட்டியம்)
தென்மராட்சிக் கோட்டம்.

வெளியீடு:
கமலாவதி பிரசுரம்.
சரசாலை - சாவகச்சேரி.

முதற்பதிப்பு: 19 அக்டோபர் 1992.
பதிப்புரிமையுடையது.
அச்சுப்பதிவு: திருக்கணித அச்சகம்,
மட்டுவில், சாவகச்சேரி.
வெளியீடு: கமலாவதி பிரசுரம்.
சரசாலை, சாவகச்சேரி.

இந்நூல் கிடைக்குமிடங்கள்:
* சரசாலை இந்து இளைஞர் மன்றம்;
* சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் அன்ட் புத்தகசாலை,
சாவகச்சேரி.



யாழ்ப்பாணம் - இணுவில்
இயலிசை வாரிதி
**பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்**
அவர்களின்

# சிறப்புப் பாயிரம்

செந்தமிழ் ஈழமதில் செழுங்க லைகள்
செழித்தோங்கத் தெய்வீக அருள் மலியத்
தந்தனளே யசோத ராவும் பரத கலை
தவழ்ந்திடும் ஆரம்ப விளக்க நூலை
பைந்தமிழ் ஆடலெனும் பரத கலை
பண்புறு சிறார்களுக்கே வகுத்து ஆய்ந்து
சிந்திடும் கலைநுணுக்கம் சிறப்பாய்த் தந்தாள்
சீர்நிறை கலைப்பரத நூலும் வாழி.

கலைஞராய்த் திகழ்வதற்கே சிறார்க ளுக்கே
கச்சிதமாய் பரதகலை நுணுக்கம் யாவும்
நிலைபெறச் சுருக்கமாக விளக்கம் தந்தாள்
நெஞ்சிலே பசுமரத் தாணி போல
கலைதவழ் அஃ்ஸமெல்லாம் கவின் பெறவே
கற்றிடவே மாணவ ருக்கர்ப ணித்தாள்
கலைமகள் அருளுமோங்க யசோத ராவும்
கலைவானில் மிளிர்ந் தொளிர ஆசி தந்தேன்.

இங்ஙனம்
இணுவில். ந. வீரமணி ஐயர்.

### யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர்

## திரு. இ. சுந்தரலிங்கம் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

''ஆத்ம சாந்தி'' கைங்கரியங்கள் பலவிதம். பயனுள்ள நூல்களை ஆக்கி ''நினைவு மலர்'' களாக வெளியிடுவது உண்மையிலேயே பெரிதும் போற்றத்தக்க செயற்பாடாகும். அதிலும் ஆயகலைகள் அறுபத்துநான்கினுள்ளும் தூயபரதக்கலை பற்றிய ''அறிமுறை'' நூலொன்றை ஆக்குவித்து தமது அன்பு மனைவி திருமதி கமலாவதியின் முதலாண்டு நினைவாக வெளியிடும் திரு. கு. பரராஜசேகரம் அவர்களின் நற்பணியை நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

நூலை இயற்றி உதவியுள்ள திருமதி. யசோதரா விவேகானந்தன் தென்மராட்சி கல்விக் கோட்டத்தின் நடன ஆசிரிய ஆலோசகர்; நூற்பொருளை முறையாக எடுத்துச் சொல்லும்பாணி, அக்கலையினைப் பயில்வோரின் கருத்தைக் கவருவதாகவும் அதன் தூய்மையை நன்குணர்த்துவதாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்மலர்ப் பொருளாம் நுண்கலையின் பெயரால் திருமதி. கமலாவதி பரராஜசேகரம் அவர்களின் ஆன்மா சாந்தியடையவும் திரு கு. பரராஜசேகரம் அவர்களின் அரும்பணி மிளிரவும் ஆடலரசன் அம்பலக்கூத்தனின் அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன். பரதக்கலை பயிலும் அனைவரும் இந்நூல் கொண்டு நற்பயன் பெறுவார்களாக.

ஓம் சாந்தி

யாழ்ப்பாணம். இ. சுந்தரலிங்கம்.



### பிரதிக் கல்விப்பணிப்பாளர்

## திரு. பொ. சிவகுருநாதன் அவர்களின்

# வாழ்த்து

அமரத்துவம் அடைந்த சரசாலையூர் திருமதி: கமலாவதி பரராஜசேகரம் குடும்பத்தினரை நான் நன்கறிந்தவன். மகள் அம்பிகா பரதம் கற்க வேண்டும் என்ற விருப்பில் மகளை திருமதி. யசோதரா விவேகானந்தனிடம் நடனம் கற்க வைத்தவர் கமலாவதி. திரு. கு. பரராஜசேகரம் அவர்கள் தன் மனைவியின் நினைவாக பரத நாட்டியத்திற்கு அணி செய்யும் வகையில் பரத நாட்டியம் அடிப்படை அறிவும் ஆரம்ப விளக்கமும் என்னும் நூலை வெளியிடுவதையிட்டு நான் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

இந்நூலை ஆக்கியவர் செல்வி. அம்பிகா பரராஜசேகரம் அவர்களின் ஆசானும், தென்மராட்சிக் கல்விக் கோட்ட நடன ஆசிரிய ஆலோசகரும், சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய நடன ஆசிரியையுமான திருமதி. யசோதரா விவேகானந்தன் ஆவர்.

இந்நூல் பரதத்தைப் பற்றிய அடிப்படை அறிவு பெற விரும்புபவர்களுக்கும், பரதத்தைக் கற்கும் மாணவர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை. இந்நூலில் பரத நாட்டியம் பற்றிய பல அம்சங்கள் ஆராயப்பட்டிருப்பதும், பரதக் கலையின் நுணுக்கங்கள் முத்திரைகள், அசைவுகள் முதலியன படவிளக்கங்களுடன் அமைவதும் கற்போர்க்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

எமது பாடசாலைகளில் நடனம் கற்கும் மாணவர்கள் இந்நூலால் பெரிதும் பயனடைவார்கள் என எண்ணுகின்றேன். 'கமலாவதி' நினைவு வெளியீடாக இந்நூல் மலர்வதையிட்டு நான் மகிழ்வடைகின்றேன்.

சுபம்

சிவபதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. பொ. சிவகுருநாதன்

உ
சிவமயம்

# பதிப்புரை

எனது பாரியாரின் முதலாண்டு நினைவு நாளின் போது ஏதாவது ஒரு நல்ல பணியினைச் செய்ய வேண்டுமென விரும்பினேன்.

என்ன செய்யலாம் எனச் சிந்தித்த வேளையில் எனது மகள் பரதம் பயில்வதும் பாடசாலைகளில் அதற்கான பாடத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் அதற்கான பாடப்புத்தகம் மாணவர்க்கு வழங்கப்படுவதில்லை என்பதும் நினைவில் வந்தது. அந்த நினைவின் விழைவே தங்கள் கரங்களில் தவழும் இந்நூல்.

நூல் ஆசிரியர் தேர்ச்சி பெற்ற ஆசிரியை. ஆசிரிய ஆலோசகர். அடியேன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற போது தமிழ்சங்கத் தலைவராகப் பணியாற்றக் கிடைத்த வேளையில் (1978 – 79) எனது அழைப்பை ஏற்று தன் சகோதரிகளுடனும் மாணவிகளுடனும் வருகை தந்து தமிழ்ச்சங்கக் கலைவிழாவில் நடன நிகழ்ச்சி நடாத்தி அங்கு பெரும் பாராட்டுப்பெற்றவர்.

இந்நூலினை எழுதித்தருமாறு அடியேன் கேட்டபோது முதன்முதலில் இத்தகைய பணியில் ஈடுபடுவதில் உள்ள சிக்கல்களையும் சிரமங்களையும் கூறி தயக்கம் காட்டினார். அப்போது பயப்படாதீர்கள் உங்கள் ஆசிரியர்களே உங்களைப் பாராட்டுவரர்கள், எழுதுங்கள் என்று ஊக்கப்படுத்தினேன்.

திருமதி யசோதரா விவேகானந்தன் அவர்கள் மனமுவந்து இப்பணியினை நிறைவு செய்து தந்துள்ளார்கள். அவருக்கும் இப்பணிக்கு ஒத்துழைப்பு நல்கிய அவரது கணவருக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நாலுக்கு ஆசியுரை வழங்கியுதவிய இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் அவர்கட்கும், வாழ்த்துரை வழங்கிக் கௌரவித்த யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் அவர்கட்கும், தென்மராட்சிக் கோட்டக்கல்வியதிகாரி திரு. சிவகுருநாதன் அவர்கட்கும், இந்நூலை அழகுற அச்சிட்டுதவிய மட்டுவில் திருக்கணித அச்சகத்தாருக்கும் எமது நன்றிகள் உரியது.

"கமலபதி" தெய்வங்கேணி விதி,
சரசாலை, சாவகச்சேரி.

அன்புடன்
கு. பரராஜசேகரம்



# முன்னுரை

பரதக்கலை இன்று தமிழ் மக்களிடையே பிரபல்யம் வாய்ந்த ஒரு கலையாக விளங்குகிறது. இக்கலையைப் பயிலும் மாணவ மாணவிகள் தொகை வீட்டுக்கு வீடு அதிகரித்துக் கொண்டேபோகிறது. பரதக்கலை என்றால் என்ன? அக்கலையின் வரலாறு, அதன் தெய்வீகத் தன்மை, இக்கலையை கற்பதன் நோக்கம், அதனால் ஏற்படும் நன்மைகள், இவற்றை அறியாமலே அதிக மாணவர்கள் அல்லது பெற்றோர்கள் இக்கலையைப் பயில, பயிற்றுவிக்க முன்வருவதை காணமுடிகின்றது. இதன் விளைவு பரதநாட்டியம் கற்பது ஒரு நாகரிகமாகவும் மற்றைய பாடங்களை கற்பதைப்போல் உணர்வற்ற ஒருயந்திர நிலைக்கு உள்ளாவதையும் என்னால் அனுமானிக்க முடிந்தது. பல வருடகால கற்பித்தலில் நான்பெற்ற அநுபவங்கள் என்னை இதுபற்றி சிந்திக்க வைத்தன. சாதாரணமக்களும் புரியக்கூடிய முறையில் பரதக் கலையின் அடிப்படை அறிவை ஆரம்ப விளக்கத்தை என்னால் கொடுக்க முடியுமா? என்று என்னுள் எழுந்த கேள்விக்கு பதில் இன்று பரதக்கலையின் ஆரம்பநூலாக உங்கள் கைகளில் தவழ்கின்றது.

பரதநாட்டியக் கலையென்ற இந்நூல் ஒரு ஆராய்ச்சிப் புத்தகம் அல்ல. ஆனால் ஆராயப்பட்ட பல விடயங்களை உள்ளடக்கி இலகு தமிழில் எழுதப்பட்ட ஒரு ஆரம்பநூல் என்பதே உண்மை.

சாஸ்திரீய வடிவில் குருசிஷ்யை முறையில் கற்றுக்கொள்ளப்பட்ட இக்கலை தேசிய கல்வித்திட்டத்தில் அழகியற்கலை பாடங்களில் ஒன்றாகவும் வட இலங்கை சங்கீத சபையினால் நடத்தப்படும் பரீட்சைகளின் ஒரு பாடமாகவும் ஆக்கப்பட்டதனால் இக்கலை பரீட்சையில் சித்தியடையும் காரணத்தை மையமாகக் கொண்டு மாணவர்களிடையே திணிக்கப்படுவதை உணரத் தலைப்பட்டதால் பரதக்கலையின் சிறப்பை, தெய்வீகத் தன்மையை யாவரும் புரிந்துகொள்ள வேண்டுமென்று எழுந்த எனது சிந்தனைக்கு வடிவமைத்துக் கொடுத்த பெருமை திரு. கு. பரராஜசேகரம் அவர்களுக்கே உரியது.

மாணவர்களுக்கும் அவர்தம் பெற்றோர்களுக்கும் பரதக் கலையின் ஆரம்ப விளக்கத்தை ஆத்மீகத் தன்மையை உணர்த்தும் வகையில் நூலாக எழுதவேண்டுமென்று என்னை எழுதத் தூண்டியது மட்டுமல்ல இந்த நூலை வெளியிடும் சகல பொறுப்புக்களையும் தானேஏற்று காலஞ்சென்ற அவரது அன்பு மனைவி

கமலாவதி பரராஜசேகரம் அவர்களின் நினைவாக வெளியிட முன் வந்தமை போற்றத் தக்கது.

இந்தநூலை வாசிப்பதன் மூலம் பரதநாட்டியக் கலையைப் பற்றிய அடிப்படை அறிவையும் அதன் தெய்வீகத் தன்மையையும் உணர்ந்துகொண்டு யாவரும் இக்கலையை பயில முன் வருவார்களானால் இந்த நூலை எழுதியதன் பலன் எனக்கு கிடைத்தவளாவேன்.

எனது இந்தமுயற்சியை பாராட்டியதோடு சிறப்புப்பாயிரம் வழங்கிய ''இயலிசை வாரிதி'' பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்களுக்கும், பாராட்டுரை வழங்கிய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அவர்களுக்கும், வாழ்த்துச்செய்தி வழங்கிய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. பொ. சிவகுருநாதன் அவர்களுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட யாவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

''திலக நர்தனாலயம்''
சாவகச்சேரி.

திருமதி ய. விவேகானந்தன்.

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பரதக்கலை | 1 |
| 2. | நடனக் கலையின் உலகியல் வரலாறு | 3 |
| 3. | நடனக் கலையின் புராணவரலாறு | 5 |
| 4. | நடனம் கற்பதன் நோக்கமும் நன்மைகளும் | 7 |
| 5. | பரதநாட்டியக் கச்சேரி அமைப்பும் உருப்படிகளின் விளக்கம் | 9 |
| 6. | பாத்திர இலட்சணங்கள் | 11 |
| 7. | அபாத்திர இலட்சணங்கள் | 12 |
| 8. | பரத நாட்டிய இலட்சணங்கள் | 13 |
| 9. | நமஸ்கார விளக்கம் | 14 |
| 10. | தியான ஸ்லோகம் | 14 |
| 11. | பரத நாட்டியத்தின் அடிப்படை மண்டல நிலைகள் | 15 |
| 12. | பாத பேதங்கள் | 16 |
| 13. | அடவு | 16 |
| 14. | முத்திரைகள் | 21 |
| 15. | பரதநாட்டிய பயிற்சி அடவுகளும் அவைபற்றிய விளக்கங்க. | 24 |
| 16. | தெய்வமரக்கலை (அநுபந்தம்) | 27 |
| 17. | நடன உட்பிரிவுகள் | 29 |
| 18. | பரதநாட்டிய உடை அலங்காரங்கள் | 31 |




# பரதக்கலை

ஆண்டவன் திருவடிகளில் மலர்ந்த அற்புதமான அழகு மலர்தான் பரதக்கலை. அந்த அற்புதமான மலர் உலகெனும் அழகான தோட்டத்தில் மொட்டவிழ்ந்து, தெய்வீக மணம் கமழ மலர்ந்து, பூத்துக் குலுங்கி, ஆடி அசைந்து ஈற்றில் அந்த இறைவனுக்கே அர்ச்சிக்கப்படும் தெய்வ மலராக காட்சியளிக்கிறது.

இந்த பரதக்கலை இந்தியாவில் மலர்ந்து வளர்ச்சிபெற்ற நுண் கலைகளில் நன்கு குறிப்பிடத்தக்கது. மிகவும் தொன்மையான இக்கலை அழகியற் சிறப்பும் ஆத்மீக சிந்தனையும் ஒருங்கே கொண்டது. தெய்வீக நிழலிலே நன்கு வளர்ச்சிபெற்ற இக்கலை மனிதனின் பல்வேறு உணர்வுகளையும் சமய தத்துவக் கருத்துக்களையும் நன்கு புலப்படுத்தவல்லது. கண்ணுக்கும் கருத்திற்கும் நற்பயனாக விளங்கும் இக்கலை, படித்தவர்கள் மாத்திரமல்ல பாமரரும் கண்டுணரத் தக்கது. சமூக பொருளியல் ஏற்றத் தாழ்வுகளையும் வேறுபாடுகளையும் கடந்து எவரும் கண்டு ரசிக்கத்தக்கது.

இந்தியாவின் பிரதான சாஸ்திரிய நடனங்களில் ஒன்றான இந்த பரதநாட்டியக்கலை, தென் இந்தியாவிலுள்ள தஞ்சாவூர் என்ற மானிலத்தில் வளர்ந்து, இன்று மிகவும் பிரபல்யம் வாய்ந்த கலையாக விளங்குகின்றது. மனிதன் தோற்றுவித்த நுண் கலைகளுள் காலத்தால் முந்தியது எனக்கருதப்படும் இந்த பரதக்கலை, ஆடற்கரசனான சிவபெருமானையே ஆதி கடவுளாகக் கொண்டது. இந்து மக்களின் முழுமுதற் கடவுளாகிய இறைவனின் நடன வடிவமும் ''நடராஜன்'' என்ற திருநாமமும் இதற்கு சான்றாகிறது அத்துடன் இறைவனே இசை நடனவடிவமாகவும் இக்கலைகளின் உயரிய இலக்காகவும், அவற்றின் ஆசானாகவும், இக்கலைகளை கற்று அர்ப்பணிப்பதன் மூலம் இறைவன் எளிதில் அடையக்கூடியவனாகவும் விளங்குகின்றான் என்பதும் ஞானிகளின் ஆழமான கருத்தாகும்.

உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருக்கும் இந்த ஆன்மீகக்கலை, ஆதிகாலத்தில் ஆடல், கூத்து என்றும் பின் இடைக்காலத்தில் கீழ்நிலையடைந்தபோது சதிர், சின்ன மேளம், தேவதாசிகள் ஆட்டம் என்றும் நம்மவர்களால் எள்ளி நகையாடப்பட்டது நடனத்தின் இடைக்கால மறுமலர்ச்சியின்

பின் சமீபகாலம் தொட்டுத்தான் ''பரதம்'' என்று இக்கலை பெயர்பெற்றது.

''பரதம்'' என்ற பதம் தொடக்கத்தில் நடிகனையும் பின்னர் நடனக்கலைக்கு விரிவான இலக்கணம் வகுத்த பரதமுனிவரின் நாமத்தைக் குறிப்பிடுவதாகவும் அமைகின்றது. அத்துடன் நடன லட்சணங்களான பாவ, ராக, தாளத்தின் முதலெழுத்துக்களை அடக்கியுள்ளதென்பதும் கருத்திற் கொள்ளலாம். இக்கலை இந்தியாவில் தோன்றியதால் அதன் பழமையான பெயரான ''பாரதம்'' என்ற சொற்பதத்தை குறிப்பிடுவதாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

ஆயகலைகள் அறுபத்துநான்கில் ஒன்றான இந்த அழகிய கலை, பக்தியின் நிழலில் தன்னை பண்பாடாக வளர்த்துக் கொண்டுள்ளது. பரதக்கலையின் இடைக்கால வரலாறுகள், பக்தி நெறியைவிட்டு விலகிய நடனக்கலை, பாழும் சேற்றில் புரண்ட நிலைக்கு சான்றுபகர்கின்றன. ஆதலால் தெய்வத்தினால் அருளப்பட்ட கலை, அந்த இறைவன் வாசம்செய்யும் கோயில்களில் வளர்ந்த கலை, மீண்டும் அந்த கடவுளுக்கே அர்ப்பணிக்கப்படுவதுதான் நியதி என்பது போல சம்பிரதாய நாட்டியக்கச்சேரி முறையில், அரங்கேற்றம் என்ற பெயரில், நடனக்கலையின் தெய்வமான நடராஜனுக்கே ஆராதனையாக இக்கலை அளிக்கப்படுகின்றது.

தெய்வசன்னிதியில், தெய்வத்தினாலே உருவாக்கப்பட்ட இந்த தெய்வீக நாட்டியம், உடலின் துன்பத்தை அறவே நீக்கி, உள்ளத்திலே தண்தென்றல் வீசச்செய்த இந்த உன்னத நடனம் ஆண்டவன் சந்நிதியிலும். கலை வளர்த்த அரசர்களின் சபையிலும், சதங்கையின் ஒலி முழங்கி அந்த ஆண்டவனே தனை மறக்கச்செய்த இந்த அற்புத நடனம், நவரசங்கள் எனும் நவமணிகளால் புனையப்பட்டு தமிழ் அன்னையின் நெற்றியதனில் அணிசுட்டியாக ஒளிர்ந்துகொண்டிருக்கும் இந்த அழகு நடனம் தன்னிடம் ஒன்றித்தவர்களை தெய்வத்திடம் இழையவிட்டு பேரின்பத்தை கொடுக்கும். இந்த பரத நடனம், இலங்கை, இந்தியாவில் தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல வேற்று தேசங்களின் மத்தியிலும் தெய்வீகக்கலையாக மிளிர்ந்துகொண்டிருக்கிறது.

பரமாத்மாவாகிய இறைவனை அடைய ஜீவாத்மாவாகிய உயிரினம் செய்கின்ற வேள்வியே நடனக்கலை என்று குறிப்பிடுவதற்கொப்ப சிற்றின்பத்தை விட்டு பேரின்பத்திற்கு வழிகாட்



டும் இந்த தெய்வீகக்கலை, நடனக்கலையின் பழமையான அடிப்படைப் பண்புகளில் ஆணித்தரமாக வேரூன்றி, பக்தியென்ற நீரூற்றி தரமான கலைஞர்களினது கலையறிவு என்னும் ஒளி பெற்று ''பரதக்கலை'' என்ற பெருவிருட்சமாக வளாவதுடன் எண்ணற்ற கலை வடிவங்களை வண்ண மலர்களாக மலரவிட்டு நறுமணம் வீசிப் பரிணமிக்கும் என்பதில் ஐயமில்லை.

''நாட்டியத்தில் காட்டமுடியாத ஞானமோ, சிறப்போ, கல்வியோ, யோகமோ, செயலோ ஒன்றுமில்லை''

— பரத முனிவர்

# நடனக்கலையின் உலகியல் வரலாறு

மனிதப் பண்பினை, பாரம்பரியங்களை, புலப்படுத்தும் கலைகளிலே நடனக்கலை குறிப்பிடத்தக்கது. இக்கலை மனிதனின் நாகரிக வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கின்றது: ''ஆயகலைகள் அறுபத்துநான்கு'' என நம் முன்னோர் தாம் அறிந்த கலைகளின் பண்புகளுக்கேற்ப வகைப்படுத்தி அக்கலைகளின் எண்ணிக்கைகளையும் குறிப்பிட்டுள்ளார்கள்: இவ்வெண்ணிக்கைகள் நாகரிக வளர்ச்சிக்கேற்ப அதிகரித்து விட்டதாயினும் நடனம் போன்ற சீர்பெறுகலைகளின் முக்கியத்துவம் குன்றவில்லை. இப்படிப்பட்ட நாட்டியக்கலை, உலகின் இயற்கைப் பண்புகளுக்கேற்ப உருவாகி வளர்ச்சிபெற்ற வரலாறே நடனக்கலையின் உலகியல் வரலாறு எனப்பட்டது.

ஆதிகால மனிதன் உண்ண உணவோ உடுக்க உடையோ, இருக்க இடமோ பேசும் மொழியோ நிரந்தரமாக இல்லாமல் மிருகங்களைப்போல அலைந்து திரிந்தான். நாளடைவில்தான் மிருகங்களிலிருந்து வேறுபட்டவன் என்று உணரத் தொடங்கினான். கவலையேற்பட்டபொழுது கண்ணீர் விட்டு அழுதான்; சந்தோஷத்தின் மிகுதியால் தன்னை மறந்து சப்தமிட்டான். சிரித்தான், கூத்தாடினான்; இப்படியாக தன் உணர்வுகளை மனிதன் வெளிப்படுத்த ஆரம்பித்தான். காலஞ் செல்லச்செல்ல இவ்வுணர்வுகளை சைகைகள் மூலம் உணர்த்த முற்பட்டான். வாயிலிருந்து வெளிப்பட்ட சப்தங்கள் ஒரு சீரான முறையில்

வரத்தொடங்கின. ஒழுங்கீனமாக கூத்தாடிய கால்தடங்கள் கூட ஒழுங்காகப் பதிய ஆரம்பித்தன. இதுவே நடனக்கலையின் ஆரம்பம் என்று கூறலாம்.

வேட்டையாடிக் காடுகளிலே அலைந்து திரிந்த மனிதன், காலப்போக்கில் கூட்டான நாடோடி வாழ்க்கையை அமைத்துக் கொண்டான். இதனால் அவனுக்கு ஓய்வு நேரங்கள் கிடைத்தன. அதனால் சிந்திக்கத் தொடங்கினான். மாக்களாக அலைந்து திரிந்த அவன் தன்னை மனிதனாக எண்ணத் தொடங்கினான். தான் வாழ்ந்த சூழ்நிலையை புரிந்துகொள்ளத் துடித்தான். மெல்ல அசைந்து வரும் வெண்முகில் கூட்டங்களின் உருவு மாற்றங்களை உன்னிப்பாக கவனிக்க ஆரம்பித்தான். நெல் வயல்களில், புல்வெளிகளில் மெல்லலைகளாக தவழ்ந்து வரும் அருவி ஆடி அசைந்து நிற்கும் பசுமையான தாவரங்கள். இப்படியாக இயற்கை மட்டுமல்ல. அங்கு வாழும் மனிதனல்லாத உயிர்த்துடிப்புள்ள உயிரினங்களின் அசைவுகள் கூட அவனின் உணர்வுகளைத் திசைதிருப்பியது. குறிப்பாக இனிய குரலெடுத்துக் கூவிய குயில், அழகுத் தோகையை விரித்தாடிய மயில், வானில் பறந்து திரியும் பறவைகள், நீரில் சுதந்திரமாக நீந்தி விளையாடும் மீன்கள், ஆடும் பாம்பு, ஓடும் மான்கள் இப்படி ஒவ்வொன்றாக அவன் கவனத்தை ஈர்த்தன. கலையுணர்வை தூண்டின. விளைவு மனிதன் தன் உயர்ந்த எண்ணங்களை, பண்பாடுகளை உணர்ந்து கொள்ள ஆரம்பித்தான்.

அதன் ஆரம்ப நிலையாக கூட்டாக தான் அமைத்த வாழ்க்கையை வளர்படுத்த ஆரம்பித்தான். நாகரிகம் படிப்படியாக வளர ஆரம்பித்து நாடோடியாக வாழ்ந்த மனிதன் நிலையான வாழ்க்கையை நதிக்கரைகளில் அமைக்க முற்பட்டான். அவன் தனக்கென, தான் வாழ்ந்த சூழ்நிலைக்கேற்ப உணவு, உடை, நிரந்தர இடம் இப்படியாக தேட ஆரம்பித்தான். தன் சுற்றத்தாருடன் உணர்வுகளை பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தான் தன் சூழலுக்கேற்ப பண்பாடுகளை பாரம்பரியங்களை உருவாக்க முற்பட்டான் கலையுணர்வும் பின்னிற்கவில்லை. சைகைகள் மூலம் கருத்தை வெளிப்படுத்த முனைந்தது ''பாவம்'' ஆயிற்று. வாயிலிருந்து ஒரு சீராக வந்த சப்தம் ''ராகம்'' ஆனது. ஒழுங்காக பதிய ஆரம்பித்த கால்தடங்கள், கைதட்டல்கள் ''தாளம்'' ஆனது. இப்படியாக புராதன காலத்திலேயே பேச்சுக்கலை, எழுத்துக்கலை தோன்று முன்பே நடனக்கலை தோன்றிவிட்டது.



இப்படியாக மனிதன் காலம் செல்லச் செல்ல தன் வாழ்க்கையில் பல திருத்தங்களை கண்டுகொண்டான். தன் தேவைகளை தேடிப் பூர்த்திசெய்ய ஆரம்பித்தான். கடின உழைப்பினால் தன் தேவைகளை பூர்த்திசெய்ய முற்பட்டதனால் உடல், உள சோர்வுகள், களைப்புகள் ஏற்பட்டன. ஆடிப் பாடி வேலைகளைச் செய்ய ஆரம்பித்தான். உதாரணமாக உழவர்கள் நெல்விதைத்து அறுவடை செய்யும் வரை ஆடிப்பாடி வேலை செய்வதை எடுத்துக்கொள்ளலாம். அதுமட்டுமல்ல தமது இஷ்ட தெய்வங்களை வணங்கும்போதும் கோயில் திருவிழாக்களின் போதும், நேர்த்திகளைப் பூர்த்திசெய்யும்போதும் ஆடல் பாடல்கள் படிப்படியாக மனிதனின் அன்றாட வாழ்க்கையிலும் பின்னிப் பிணைந்து வளரலாயிற்று.

இயற்கையாக வளர்ந்த இந்த நடனக்கலை உலகின் பல பாகங்களில் ஆடப்பட்டு வந்தது. புராதன எகிப்திய, சுமேரிய, இந்திய சீன, நாகரிகங்களிலே முக்கிய இடம் வகித்தது. பிற நாடுகள் போல இந்தியாவிலும் நடனக்கலை படிமுறையாக வளர்ச்சியுற்றது. இந்திய சாஸ்திரிய இசைபோல நடனமும் ஒன்றாகவே திகழ்ந்தது. காலம் செல்ல பிராந்திய வேறுபாடுகளின் அடிப்படையில் ஏற்பட்ட பிறபண்பாட்டுத் தாக்கம் முதலியவற்றால் பல்வேறு நடனங்கள் தோன்றின. இவற்றுள்ளே தமிழ்நாட்டை மையமாகவும் பாவ, ராக, தாள இலட்சணங்களை அடிப்படையாகவும் கொண்டு பரதநாட்டியம் தோன்றியது. இதுவே பரதக்கலையின் இயற்கையான உலகியல் வரலாறு எனலாம்.

## நடனக்கலையின் புராண வரலாறு

அணு முதல் அண்டம்வரை இடைவிடாது இயங்கிக்கொண்டிருக்கும் அசைவிற்கும் செயல்கட்கும் இறைவனாகிய அம்பலத்தரசனின் ஆடல்தான் மூலகாரணம் ஆகிறது. அந்த இறைவனோடு இணைந்த நடனக்கலையின் ஆரம்ப வரலாறு நடனக்கலையின் புராண வரலாறு எனப்படும். நெடுங்காலமாக இந்து சமயத்துடன் பின்னிப் பிணைந்து வளர்ந்துவரும் இந்தப் பரதக்கலையின் தோற்றம்பற்றி நாட்டிய சாஸ்திரம் பின்வருமாறு கூறுகின்றது.

தேவர்கள் படைத்தல் கடவுளாகிய பிரம்மாவிடம் சென்று செவிக்கு மட்டுமின்றி கண்ணிற்கும் இன்பமளிப்பதும் நான்கு வேதங்கள் போலல்லாது யாவருக்கும் பொதுவான வேதம் ஒன்றினை ஆக்கித்தருமாறு வேண்டினர்; பிரம்மதேவரும் வேதங்களை பிரமாணப்படுத்தும்போது இருக்குவேதத்தில் பொருளையும் யசுர்வேதத்தில் அபினயத்தையும் சாமவேதத்தில் இசையையும் அதர்வவேதத்திலிருந்து நவரஸ பாவங்களையும் தொகுத்து இதிகாச இயல்புகளையும் சேர்த்து அறம், பொருள், இன்பம், வீடு பயக்கவல்ல நாட்டிய சாஸ்திரத்தை உருவாக்கினார். இதுவே 5-வது வேதமென்றும் காந்தர்வ வேதமென்றும் அழைக்கப்படும் நாட்டிய வேதமாகும்.

அழகியல் சிறப்பும் ஆன்மீக விளக்கமும் கொண்ட இந்த அருங்கலையை பூவுலகிலுள்ள ஆன்மாக்கள் கண்டு களிப்புறும் பொருட்டு இப்பூவுலகில் பரப்ப எண்ணினார் பிரம்மதேவர். எனவே பக்தியும் மிகுந்த சக்தியும் வாய்ந்த பரதமுனிவரை அழைத்து அவருக்கும் அவர் குழவிற்கும் இக்கலையை சாஸ்திர ரீதியாக முறைப்படி கற்றுக்கொடுத்தார். இவர்கள் இமயமலைச் சாரலில் தங்கள் பயிற்சியை மேற்கொண்டுள்ள வேளையில் நடனக்கலையின் அதிபதியான நடராசப்பெருமான் தனது ''தாண்டவம்'' என்னும் மேன்மை வாய்ந்த நடனத்தை பரதமுனிவருக்குக் கற்றுக்கொடுக்க எண்ணினார்: தன் கணங்களில் ஒருவரான தண்டுமுனிவர் மூலம் தாம் அந்திவேளையில் ஆடும் ஆடலாகிய தாண்டவ நடனத்தை பரதருக்குக் கற்றுக் கொடுத்தார். பரதமுனிவரும் இக்கலையை முறையாகக்கற்று தனது ஆடற்கலையை எல்லோர் முன்னிலையிலும் அரங்கேற்றினார்.

சக்தியாகிய உமையும் மென்மையும் நளினமானதுமான ''லாஸ்யம்'' என்ற நடனத்தை பாணாசுரனின் மகளுக்குக் கற்றுக்கொடுத்தார். பாணாசுரனின் மகளாகிய உஷையும் ஆடற்கலையை இறைவனின் அருளைப்பெற்று பூவுலகில் இந்த அற்புதக் கலையை பரப்ப எண்ணி பரதகண்டத்தில் தங்கள் காலடிகளை பதித்தார்கள். இவர்கள் தென்னிந்தியாவிலுள்ள துவாரகை என்னும் இடத்திற்குச் சென்று இடைச்சேரியிலுள்ள கோபியப் பெண்களுக்கு இக்கலையினை கற்றுக்கொடுக்க, அவர்கள் இந்தச் சீரிய கலையை தொழிலாகக் கொண்டு அயல் கிராமத்திலுள்ள சௌராட்டிர பெண்களுக்கு சொல்லிக் கொடுக்க படிப்படியாக இக்கலை உலகெங்கும் பரந்து வளரத் தொடங்கியது. இவ்வாறு பரதரின் நாட்டிய சாஸ்திரத்தில் நடனக்கலையின் புராண வரலாறு கூறப்படுகிறது.



# நடனம் கற்பதன் நோக்கமும் நன்மைகளும்

உலகம் போற்றும் நடனக்கலையை நாம் கற்பதனால் கலையறிவு மேம்படுவதோடு ரசிகத்தன்மையும் வளர்கின்றது. அழகுணர்வை கூட்டும் இக்கலை உடல், உள, உணர்வுகளை வெளிப்படுத்தும் காரணியாகவும் அமைகின்றது. இக்கலை ஒரு தேகாப்பியாசமாகத் தொழிற்பட்டு உடலை சுகதேகமாகவும் சிறந்த கட்டமைப்புள்ள உடல் வளர்ச்சியையும் கொடுப்பதோடு மனதில் ஆன்மீக நெறியை உணர்த்தி உள்ளத்தை தூய்மைப் படுத்தும் கலையாகவும் மிளிர்கின்றது.

இறைவனால் அருளப்பட்ட இந்த நடனக்கலை கோவில்களில் வளர்ந்ததால் பக்திநெறியை எம்மிடையே பரவிடச் செய்வதோடு சமய தத்துவக் கருத்துக்களையும் அபிநய ஆக்கமூலமும் எமக்கு புரியவைக்கிறது. கண்ணுக்கு விருந்தாக விளங்கும் இக்கலை கருத்துக்கும் நல்விருந்தாக அமைந்து எம் சிந்தனையை வளமுறச் செய்கிறது.

பேச்சுக்கலை தோன்றுமுன்பே மனிதரிடம் தோன்றிவிட்ட இந்த நடனக்கலை, மனிதனின் சகல நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியதோடு அவன் அறிவு வளர்ச்சியடைய தன்னையும் வளர்த்துக்கொண்டுள்ளது. மனிதனின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து காணப்படும் இக்கலை, அவன் வாழ்வில் ஏற்படும் சுக துக்கங்களை வகைப்படுத்தி ஒன்பது சுவைகளாக்கி நவரஸங்களாக எமக்குத் தந்திருக்கின்றது. இதனால் வாழ்க்கைத் தத்துவத்தை உணர்ந்து செயற்பட வைப்பதோடு எம் அன்றுடவாழ்க்கையில் ஏற்படும் குறை நிறைகளை, ஏற்றத் தாழ்வுகளை சீர்தூக்கிப் பார்க்கும் திறமையையும் எமக்குத் தருகிறது.

''ஒரு நாட்டின் பண்பாடு பாரம்பரியங்களை அந்நாட்டின் கலை வடிவங்களைக் கொண்டு உணரலாம்'' என்னும் கூற்றுக்கமைய தமிழரின் நுண் கலைகளான இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழில் மூழ்கி எழுந்த பரதக்கலை என்ற முத்து தமிழரின் பண்பாடுகளையும் பாரம்பரியங்களையும் பேணிக்காக்கின்றது. இன்று வழக்கில் உள்ள கிராமிய நடனங்கள்கூட சூழ்நிலைக்கேற்ப உருவாகி அப்பிரதேச மக்களின் நடை உடை பாவனைகளை சித்தரிப்பதோடு மக்களுக்கு தேவையான கருத்

தாழமிக்க கருத்துக்களை நடன ஆக்கங்கள் மூலமாகவும் மக்களின் மனதில் பதியவைக்க முடிகிறது.

பெரும்பாலும் இக்கலை குருகுல முறைப்படி கற்பதனால் அன்பு, குருபக்தி, பணிவு, பெரியோரை மதித்தல் ஆகிய நற்பண்புகளையும், தன்னம்பிக்கை, ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகிய நன்னெறிகளையும் கடைப்பிடிக்க உதவுகிறது.

இறைவனுக்கு உடல் உள்ளம் யாவற்றையும் அர்ப்பணித்து கடுமையான நடனப் பயிற்சியினால் ரஸ பாவங்களின் வடிவமாகி தன்னை முழுமையாக இறைவனிடம் ஐக்கியமாக்கிக் கொள்ளவும் தன் வாழ்க்கையில் ஏற்படும் வேதனைகளையும் சோதனைகளையும் சகித்துக்கொள்ளும் மனவலிமையையும் துணிவையும் இயல்பாகவே பெற்றுக்கொள்ள முடிகிறது. பரமாத்மாவையடைய ஜீவாத்மா செய்யும் வேள்வியின் ஆகுதியாக ஆடும் பெண்ணை ஆக்கிக்கொள்வதோடு, சிற்றின்பமாகிய உலகமாயைகளை விடுத்து பேரின்பமாகிய தெய்வ ஒளியில் சங்கமித்துக் கொள்ள நல்வழி ஒன்றையும் அமைத்துக் கொடுக்கின்றது.

பல்வேறு நாட்டுமக்கள் விரும்பிக் கற்கும் இந்த அழகியற் கலை வெவ்வேறு தேசங்களில் தனது முத்திரையைப் பதித்திருப்பதோடு தனது முக்கிய பண்புகளில் ஒன்றான பத்திநெறி வழுவாது மேற்கத்திய நாடுகளில் கூட தனக்கென மாணவர்களை உருவாக்கி வருகிறது. இக்கலையை நம்நாட்டில் தேசிய கல்வித் திட்டத்தில் ஒரு பாடமாக ஏற்றுக் கொண்டது மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமென்றே கொள்ளலாம். பாடசாலைகளில் அழகியற் கலையாக அறிமுகப்படுத்தப்பட்ட இக்கலை மாணவர்களுக்கு கலையறிவையும், மற்றவர்களை புரிந்துகொள்ளும் தன்மையையும், ஒற்றுமை உணர்வையும் உடல், உள வளர்ச்சியையும் ஏனைய நடனங்களை இனம் காண்பதன் மூலம் அவற்றின் பண்பாடு, பாரம்பரியங்களை அறிந்துகொள்ளும் ஆற்றலையும் ஏற்படுத்துவதோடு ஏனைய பாடங்களில் புத்துணர்வோடு ஈடுபட ஊக்கவிசையாகவும், சகலதுறைகளிலும் திறமை மிக்கவர்களாகவும் ஆக்கத்திறன் உள்ளவர்களாகவும் விளங்க இந்த அழகுக் கலை வழிகோலுகிறது.

பெருமைமிக்க இந்த நடனக்கலை, நாட்டையும், மக்களையும் நல்வழிப்படுத்தும் சேவையை நோக்கமாகக் கொண்டு நன்மை பயக்கும் ஆக்கங்களையும் உலகிற்கு அளித்து வருகிறது என்றால் மிகையாகாது.



# பரத நாட்டியக் கச்சேரி அமைப்பும் உருப்படிகளின் விளக்கமும்

ஆதிகாலத்தில் வெறும் கூத்து வடிவில் நிலவிய பரதக் கலையை, 18-ம் நூற்றாண்டில் தஞ்சை பிருஹதீஸ்வர ஆலயத்தின் நாட்டிய பரம்பரையில் வந்தவர்களான பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகிய சகோதரர்கள், புதிய பாணியில், கச்சேரி, வடிவமாக முதன் முதலில் உருவாக்கித் தந்தவர்களாவர். முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்களின் மாணவர்களாகிய இவர்கள் ஒரு பரதநாட்டியக் கச்சேரி உருப்படிகள் எவை என்பதை தீர்மானித்ததோடு அவை எவ்வொழுங்கில் இருக்கவேண்டும் என்பதையும் "தஞ்சை நால்வர்" என்று அழைக்கப்படும். இச்சகோதரர்களே வடிவமைத்துக் கொடுத்தார்கள்.

இக்கச்சேரி அமைப்பிலுள்ள உருப்படிகள் ஒழுங்கமைப்பை உற்றுநோக்கிடின் முறையான கருத்தொன்று தெளிவாகப் புலப்படுவதை எம்மால் உணரமுடிகிறது. ஒரு மலர்ச் செடியில் உருவாகும் அரும்பு, மொட்டாக வளர்ந்து மெல்ல மொட்டவிழ்ந்து இதழாக விரியும்போது அதற்கேயுரிய நிறமும் மணமும் கொண்டு பரிணமிப்பது போல இந்தக் கச்சேரி அமைப்பிலும், ஆடலும், அபிநயமும் மெல்லத் தலையெடுத்து கொஞ்சம் கொஞ்சமாக விரிந்து சத்தம் தனிச்சிறப்புடன் முழுமையாக மலர்ந்து மணம் பரப்புவதை கண்டு உணரமுடிகிறது.

இந்த நடனக் கச்சேரியில் உள்ள உருப்படிகளின் ஒழுங்கமைப்பு, அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம், பதங்கள், தில்லானா என்றவடிவில் அமைந்திருப்பதைக் காணலாம். ஆரம்ப உருப்படியான அலாரிப்பு பின்வரும் நிகழ்ச்சிகளுக்கு முகவுரை போலவும் இறைவன், குரு, சபை ஆகியோருக்கு வணக்கம் செய்வது போல தனி லயக்கொளிப்புடன் ஆடப்படுகிறது. தொடர்ந்து ராகத்தோடு ஸ்வரத்திற்கேற்ப கோர்வைகள் அமைக்கப்பட்டு ஆடப்படும் ஜதிஸ்வரம் இடம் பெறுகிறது. அடுத்ததாக வரும் சப்தத்தில் மெல்ல தலைகாட்டும் அபிநயத்தின் செறிவு சற்று விரிவடைகின்றது. முதலிரு உருப்படிகளிலும் நிருத்த ஆடல் சிறிய அசைவுகளுடன் ஆரம்பித்து ஜதிஸ்வரத்தில் உறுதியாகியதைத் தொடர்ந்து மூன்றாவது உருப்படியாக சப்தம் அறிமுகமாகின்றது. அபிநய சாகித்தியங்களுடன் இந்த நிகழ்ச்சி இடம் பெறு

கின்றது முதல் மூன்று உருப்படிகளிலும் நிருத்த ஆடல் என்றால் என்ன? அபிநயம் என்றால் என்ன? என்று கோடி காண்பித்தாகி விட்டது. தொடர்ந்து வரும் வர்ணத்தில் பாட்டின் இசை, ஆட்டத்தின் லயம், அர்த்தத்தின் அபிநயம் இவை மூன்றின் செழிப்பும் சமமாக இடம் பெறுகிறது. இந்த உருப்படி நாட்டியத்தின் நடுநாயகமாக விளங்கும் நிகழ்ச்சியாகும். இசைக் கச்சேரியில் இராகம், தாளம், பல்லவி போன்று நடனக் கச்சேரியில் வர்ணம் இடம்பெறுகின்றது. செறிவுள்ள ஆடற்பகுதியில் இலயித்ததால் தொடர்ந்து வரும் பதங்களை கட்டிய கச்சேரிக்கு ஓர் அமைதியை, குளிர்ச்சியைத் தருவது போன்று, பரமாத்மா, ஜீவாத்மா தத்துவத்தை விளக்கும் அபிநயத்தை அடக்கமாக தருகின்றன. அதன்பின் இடம்பெறும் தில்லானா, நிருத்த ஆடலின் சிறப்பினை எடுத்துக் காட்டுவது போல லய வின்னியாசங்களை அழகாக விளக்குகின்றது. கடைசியாக நடனக்கச்சேரியில் இலயித்திருக்கும் எம்மை இறைவனோடு இணைய வைப்பது போல சாத்வீக உணர்வுகளை வெளிப்படுத்துப் ஸ்லோகம் அல்லது விருத்தம் இடம் பெறுவதோடு கச்சேரி முற்றுப்பெறுகிறது. இன்றைய நடனக்கச்சேரிகளில் பதத்தைத் தொடர்ந்து இறைவனது பெருமைகளை சித்தரித்து ஆடும் கீர்த்தனம் அபிநயத்தை தரும் ஜெயதேவரின் அஸ்டபதி, மற்றும் ஜாவளி போன்ற உருப்படிகள் சேர்க்கப்படுவதையும் கருத்திற் கொள்ளலாம்.

நடனத்தை குருகுல முறைப்படி கற்கும் மாணவர்கள் தாம் கற்ற நடனத்தை பலர் முன்னிலையில் மேடையேற்றவும் நடன தெய்வமான சிவபெருமானுக்கு அர்ப்பணிக்கவும் நடைபெறும் சம்பிரதாய நிகழ்ச்சியில் தஞ்சை நால்வரால் அறிமுகப் படுத்தப் பட்ட இந்தக் கச்சேரி அமைப்புமுறை இடம்பெறுவதை சாஸ்திரரீதியான நடனநிகழ்ச்சிகளில் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது.



# பாத்திர இலட்சணம்

சாஸ்திர ரீதியாக நடனமாடும் பெண் கொண்டிருக்க வேண்டிய சிறப்பம்சங்கள் அல்லது தகுதிகள் ''பாத்ர லட்சணம்'' எனப்படும். அதாவது ஒரு நடனமாடும் பெண்ணின் குலம், அவளின் தோற்றம், இயற்கையான அறிவு, நோய், குறைபாடற்ற உடல் ஆகியவை பற்றிய தெளிவான விளக்கம் இங்கு சொல்லப் படுகிறது.

ஒரு நடனமாடும் பெண் மன்னன் முதல் மூன்று குலத்துதித்தவள். சிவந்த நிறமும் அழகும் உடையவள். அன்னம் போன்றவள். இத்தகைய பெண் அரசசிம்மாசனத்தின் முன்னே பத்து முழம்விட்டு கிழக்குத்திசையில் திரையை நீக்கி பூரணசந்திரனைப் போலவும் பூத்த வஞ்சிக்கொடி போலவும் கார்மேகம் பிளந்து மின்னல் வெளிப்பட்டது போலவும் விளங்கி தொழிற்படத் தோன்றுவாள்.

இப்பெண் ஒத்திய தாளச் சுருதி தவறாது சொற்களுக்கு ஏற்ற ஆடலுடன் தான் கற்ற கல்வி மறவாது சாஸ்திர விளக்கங்களில் கருத்தையூன்றி, பித்து, நோய், சலிப்பு, மெலிவு ஆகிய குற்றங்கள் இல்லாமல் பக்தியுடன் மதுரவாசகம் பேசி, இசைப் பாடலுடன் ஆடத்தொடங்குவாள்.

மேலும் அவள் மிகப் பருத்தல், மிக இளைத்தல், மிகஉயரம், மிகக் குறுகல் இல்லாத உடலும், தக்சரூபமும், உத்தமகுணங்களும் பெற்று, அறிவு உரம் பெற்றவளாய், மனோகர தாள, ஸ்வரஞானம், விசால நேத்திரம், அபயவ அமைப்பு, முகமலர்ச்சி ஆகியவற்றை உடையவளாய், ஹாஸ்தஅங்க வின்னியாசங்களை அறிந்தவளாய் இருப்பாள். அத்துடன் கூர்சர, மராட்ட, விராட்ட சௌராட்டிர மன்னர்களின் கோத்திரத்தில் பிறந்தவளாய் குறில் நெடில் இவற்றின் இசையை அறிந்தவளாய் பிறருடைய மனத்தையறியும் சக்தி பெற்றவளாய், கபடமும் கோபமும் இல்லாமல் துறவிகள், தெய்வம், குரு இவர்களிடம் பக்தி கொண்டவளாய் இருப்பாள். மண்டல். தாளம், நிருத்தம், வாத்தியம், கீதம், இவற்றை அனுசரிக்கும் அறிவும் கொண்டு, சிறந்த பண்பும், உத்தம ஆபரணங்களையும் அவள் தரித்திருப்பாளென சாஸ்திரங்கள் கூறுகின்றன.

# அபாத்திர இலட்சணம்

நடனமாடத் தகுதியற்ற ஒரு பெண்ணிற்கு இருக்கக் கூடிய குறைகள், செயல்கள் அபாத்திர லட்சணம் எனப்படும். அதாவது நடனமாடும் பெண்ணுக்கு இருக்கக்கூடாத அங்கக் குறைபாடுகள், தக்கருபமற்ற அமைப்பு, பண்பற்ற நடையுடை ஆகியவை பற்றிய விளக்கங்களை ''அபாத்ர லட்சணம்'' எடுத்துச் சொல்கிறது.

அரசனுக்கு பின்காட்டல், முகத்தில் பெருகும் வியர்வையை துடைத்தல், கண்பிசைதல், தலைசொறிதல், சோம்பி உருநெளிதல், நடுங்குதல், மிக இளைத்தல், கூந்தலை சபைமுன்பே கோதிமுடிதல், உடல் சொறிதல், உதட்டைக் கடித்தல், இருதரவுடமை உதட்டை நாக்கால் தடவுதல், தரையில் விழுந்த ஆபரணங்களைத் தேடுதல் ஆகிய சபைக்குற்றங்கள் உள்ள பெண் நடனமாடத் தகுதியற்றவள்;

அத்துடன் கோபம், திடமின்மை, நோய், கல்வியறிவில்லாமை, குறிப்பறியாமை, பொறுமையின்மை, சொற்பொருள் அறியாமை, குருவின் சொல்மீறிய நடையுடைமை, வாத்தியம், கானம், நிருத்தம் இவற்றின் விளக்கங்களை அறியாமை இப்படிப்பட்ட குணவியல்புள்ள பெண்ணும் நாட்டியத்திற்கு அபாத்திரமானவள்.

பெரியதலை, பிளந்தவாய், பெரியகால்கள், கர்ப்பம் தரித்த மெய், கொங்கையில்லாமை, கூந்தலின்மை, அம்மை வடுவுள்ள முகம், தொஞ்சிய தனம், மிகப்பருத்தல், மிக இளைத்தல், அதிக கூனல், வெள்ளுதடு, மிக உயரம், மிகக்குறுகல், ஈனஸ்வரம், தளர்மெய், கறுப்புநிறம், செவிடு, கழுத்துநீளம், முகநீளம் ஆகிய அங்கக்குறைபாடுகளும் சிவந்தகண், ஒருகண்ணுடைமை, மாறுகண் முழிக்கண், நீர்க்கண், மாலைக்கண் ஆகிய கண்குறைபாடு உள்ள பெண்ணும் நடனமாடும் தகுதியற்றவள் ஆவாள் என சாஸ்திர நூல்கள் மொழிகின்றன.



# பரதநாட்டிய இலட்சணங்கள்

பரதநாட்டியத்தின் மிக முக்கியமான அடிப்படை அம்சங்கள் பரதநாட்டியத்தின் இலட்சணம் எனப்படும். இந்த இலட்சணங்கள் மூன்று வகைப்படும். அவையாவன பாவம், இராகம், தாளம் என்பனவாகும்.

**பாவம்** உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளுக்கு அல்லது பாடல்களுக்கு ஏற்ற கருத்துக்களை, [உயிர்த்துடிப்போடு] முக அசைவின் மூலம் வெளிப்படுத்திக் கருத்தினை இலகுவாகப் புரியவைத்தல் பாவம் எனப்படும்.

**இராகம்** இராகமென்பது சுரவர்ணங்களினால் அழகு செய்யப் பெற்றுக்கேட்போர் உள்ளங்களில் இன்பமூட்டும் இசை வடிவாயுள்ளது; செவிக்கு இனிமையைக் கொடுக்கும் சப்தமே நாதம் ஆகும். துவனி, ஒலி, ஓசை இவையெல்லாம் இனிமையைக் கொடுக்கும் சப்தத்திற்குரிய மறுபெயர்கள் ஆகும். சப்தம் ஒழுங்கான முறையில் உண்டாக்கப்படும் போது நாதம் உருவாகிறது. இந்த நாதத்திலிருந்து ஸ்ருதிகளும், ஸ்ருதிகளிலிருந்து இராகங்களும் தோன்றுகின்றன.

**தாளம்** பாட்டின் கால அளவைச்சேர்த்து கையினால் அல்லது கருவியினால் தட்டுவது தாளம் எனப்படும். இத்தாளத்தின் உற்பத்தியானது முக்கியமான மூன்று அம்சங்களைக் கொண்டதாக இருக்கிறது. அவை காலம், செய்கை, அளவு என்பனவாகும். இம்மூன்றும் எப்போது சேர்ந்திருக்குமோ அப்போதே தாளத்தின் உற்பத்தி உண்டாகிறது.

உயிர்த்துடிப்புள்ள பாவமும் உணர்வுகளை மீட்கும் ராகமும் உயிர்நாடியான தாளமும் ஒன்று சேரும்போது பரதக்கலையின் பூரணத்துவம் சிறப்படைகின்றது என்றால் மிகையாகாது.

# நமஸ்கார விளக்கம்

நடனப்பயிற்சி அல்லது நடன நிகழ்ச்சிக்கு முன் வணங்குதல் நமஸ்காரம் அல்லது தட்டிக் கும்பிடுதல் எனப்படும். இந்த வணக்கம் நடனம் ஆடும் முன்பும் பின்பும் செய்யப்படுவது வழக்கமாகும். நாம் கற்கும் இந்த நடனக்கலை எமக்கு சிறந்த பலனைத் தரவேண்டுமெனவும், ஆடும் நடனத்தில் குறைகள் ஏற்படாமலிருக்கவும் அப்படி தவறு ஏற்பட்டால் மன்னிக்கும்படியும் இறைவன், குரு, அஷ்டதிக்குப் பாலகர்கள், பூமாதேவி ஆகியோரை நினைந்து வழிபடல் என்பது குறிப்பிடத்தக்கது. நமஸ்காரத்திற்கு பாவிக்கும் முத்திரைகள்:-

கடகாமுகம், சிகரம், சதுரம், அஞ்சலி

# த்யான ஸ்லோகம்

ஆங்கிகம் புவனம் யஸ்ய
வாச்சிகம் சர்வ வாங்மயம்
ஆஹார்யம் சந்ர தாராதி
தம் நுமஃ ஸாத்விகம் சிவம்

கருத்து எவருக்கு இப்புவனம் முழுவதும் அசைவுள்ள திருவுடம்பாக (ஆங்கிகம்) மிளிர்கின்றதோ, மொழிகளிலுள்ள வார்த்தைகள் யாவும் எவர் மயமாக (வாச்சிகம்) இலங்குகின்றனவோ சந்திரனும், நட்சத்திரங்களும், பிறவும் எவரின் அணிகலன்களாக (ஆஹார்யம்) ஒளிர்கின்றனவோ அப்பெயர்ப்பட்ட பெருமை வாய்ந்தவரும் சாத்விக மயமாகவே விளங்குபவருமான சிவபெருமானை வணங்குகின்றோம்.

கருத்து விளக்கம்: நாட்டியத்தின் கடவுளாகிய நடராஜனுக்கு இது கடவுள் வணக்கமாக சமர்ப்பிக்கப்படுகிறது. உலகத்தை தன் திருவுடம்பாகவும், எல்லோராலும் பேசப்படும், சகல மொழிகளையும் தனது திருமொழியாகவும் சந்திரன் நட்சத்திரங்கள் போன்ற ஒளிக்கிரகங்களை அணிகலனாகவும் அணிந்த முழுமுதற் கடவுளே நாட்டியத்தின் முக்கிய பாவமும் ஆழமானதுமான ஸாத்விக உணர்ச்சியை உள்ளடக்கி, தூய்மையாக காட்சியளிக்கும் சிவபெருமானே! உன்னை மனம் நிறைந்து பணிகின்றேன்.



# பரத நாட்டியத்திற்கான அடிப்படை மண்டல நிலைகள்

சமநிலை: கால்கள் இரண்டினையும் சேர்த்து, கைகள் இரண்டும் இடுப்பில் பொருந்த படம் 1ல் காட்டியவாறு நிமிர்ந்து நிற்றல் சமநிலை எனப்படும்.

[படம் 1ல் பார்க்க]

அரைமண்டி: கைகள் இடுப்பில் பொருந்த கால்களை பக்கவாட்டில் திருப்பி குதிக்கால்களை ஒன்று சேர்த்து அடிப்பாதம் நிலத்தில் பதிய படம் 2ல் காட்டியவாறு அமர்தல் அரைமண்டி எனப்படும்.

[படம் 2ல் பார்க்க]

முழுமண்டி: நுனி விரல்களை நிலத்தில் ஊன்றி கால்களை பக்கவாட்டில் திருப்பி முழுமையாக கீழ குதிக்கால்களில் படம் 3ல் காட்டியவாறு அமர்தல் முழுமண்டி எனப்படும்.

[படம் 3ல் பார்க்க]

அரைமண்டியில் கீழ் பாதங்களின் நிலை

[படம் 4ல் பார்க்க]

முழுமண்டியில் பாதங்களின் நிலை

[படம் 5ல் பார்க்க]

சுவஸ்திக நிலையில் பாதங்களின் அமைப்பு

[படம் 6ல் பார்க்க]

நாட்டும் பாதத்தின் அமைப்பு

[படம் 7ல் பார்க்க]

(படங்கள் தனியொரு தாளில் காட்டப்பட்டுள்ளன.)

# பாத பேதங்கள்

பாத நிலைகள் பல வகைப்படும். இந்த நிலைகளை உள்ளடக்கிய பாதபேதங்களை நான்காக வகைப்படுத்தலாம். பின்வரும் ஸ்லோகம் அந்த பாதபேதங்களைக் குறிப்பிடுகின்றது.

> ''மண்டலோத் பிலவனே சைவ
> ப்ரமரி பாத சாரிகா"
> ''சதுர்த்தா பாதபேதாஸ்யுஸ்
> தேஷாம் லக்ஷண மூச்சயதே''

அதாவது (1) மண்டலம் (2) உத்பிலவனம் (3) ப்ரமரி (4) சாரீ ஆகிய நான்குமே பாதபேதங்களாவன. இந்தப் பாத பேதங்களின் நிலைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1; மண்டலம்:- நிலை (Position)
2. உத்பிலவனம்:- தளங்கு தோம் (குதித்தல்) (Jumping or Leaping)
3. ப்ரமரி:- சுற்றி வருதல்
4. பாதசாரி:- நடை (Gait Walk)

# அடவு

மேலே குறிப்பிட்ட பாதபேதங்களையும் முத்திரைகளையும் அடிப்படையாகக் கொண்டே அடவுகள் உருவாக்கப்படுகின்றன. இந்த அடவுகள், தட்டடவில் ஆரம்பித்து தட்டு மெட்டு அடவில் முற்றுப்பெறுகிறது. அதற்கிடையில் பலவித நிலைகளையும், கால் அமைப்புக்களையும், வித்தியாசமான செய்கை முறைகளையும், முத்திரைகளையும் எமக்கு அறிமுகப்படுத்துகின்றன. ஒவ்வொரு வகையான அடவிலும் பல பிரிவுகள் உள்ளடங்கியுள்ளன. அடவுகள் அனைத்தையும் ஒன்றிற்கொன்றுள்ள தொடர்பை புரிந்துகொண்டு, எளிதில் கற்று நினைவில் வைத்துக் கொள்ள தொடர்ந்த பயிற்சி அவசியமாகின்றது. இந்த அடவுகளை பழகுவதால், உட்காருவது, எழுந்திருப்பது, சுற்றுவது, குதிப்பது, வளைவது, குனிவது, சாய்வது போன்ற உடல் வின்னியாசங்களும், தட்டு, மெட்டு, குதிப்பு முதலிய காலின் செயல் வகைகளும் இயல்பான பழக்கமாகின்றன.



எனினும் இந்த அடவுகளின் பிரயோகங்களை பூரணப்படுத்த, சரியான தட்டுடனும், ஒலியுடனும் கைகால்கள் இருக்க வேண்டிய அளவுகள், போகவேண்டிய கோர்வைகள் எல்லாம் தப்பில்லாமல் சாதிக்க, மாணவர்களின் திறமைக்குத் தக்கவாறு சுமார் ஒன்றரை வருடங்களாவது ஆகும். தூய நிருத்தத்திற்கு அடிப்படையாக விளங்கும் இந்த அடவுகள், பின்கோர்வைகளாகவும், தீர்மானங்களாகவும் பரிணமிக்கின்றன.

# தட்டடவு

கால்களை தட்டிச் செய்வதால் இது தட்டடவு எனப் பெயர்பெற்றது. நடனத்தின் ஆரம்ப பயிற்சி அடவு இதுவாகும். கைஅசைவுகளோ முத்திரைகளோ இன்றி தனி அரைமண்டி நிலையில் இந்த அடவு ஆடப்படுகிறது. இந்த ஆடலின் முழுமையான உபயோகம் அரைமண்டி நிலையை உறுதிப்படுத்துதல் ஆகும். இந்த அடவுகளின் எண்ணிக்கை எட்டு ஆகும் 3-ம் 8-ம் அடவுகள் ரூபகதாளத்திலும் ஏனையவை ஆதிதாளத்திலும் பயிற்சி செய்யப்படுகின்றன.

## தட்டடவுகளும் அதன் சொற்கட்டுகளும்

1. தெய்யா, தெய்
   1—வ 1—இ
2. தெய்யா தெய் தெய்யா தெய்
   1—வ 2—வ 1—இ 1—இ
3. தெய்யா தெய்யா தெய்
   1 2 3
4. தெய்யா தெய்யா தெய்யா தெய்
   1 2 3 4
5. தெய்யா தெய்யா தெய் தெய் தாம்
   1 2 3 4 5
6. தெய்யா தெய்யா தெய் தெய்யா தெய்யா தெய்
   1 2 3 4 5 6
7. தெய் தெய் தத் தத் தெய் தெய் தாம்
   1 2 3 4 5 6 7
   வ வ வ இ வ வ வ
8. தெய் தெய் தெய் தெய் தித் தித் தெய்
   1 2 3 4 5 6 7
   வ இ வ இ வ இ வ

## நாட்டடவு

கால்களை நாட்டிச்செய்யும் பயிற்சியடவு நாட்டடவு எனப்படும். இது எட்டு வகைப்படும். யாவும் ஆதிதாளத்திலேயே ஆடப்படுகின்றன. முதன் முதலாக கை அசைவுகளையும் முத்திரைகளையும் அறிமுகப்படுத்தும், இந்த அடவின் சொற்கட்டு, "தெய்யும் தத்தத் தெய்யும் தாம்" எனப்படும். இந்த அடவில் அரைமண்டி, முழுமண்டி, சமநிலை, பிரேங்கணம், சுவஸ்திகம் ஆகிய மண்டல நிலைகள் இடம்பெறுகின்றன.

## குதித்து மெட்டடவு

நுனி விரல்களில் குதித்து, குதிக்கால்களினால் மெட்டுவதனால் இது குதித்து மெட்டடவு எனப் பெயர்பெற்றது. இந்த அடவிற்கு, "தெய்ஹத் தெய்ஹி" என்று இன்னுமொரு பெயரும் உண்டு. இந்த அடவுகள் யாவும் ஆதிதாளத்திலேயே ஆடப்படுகின்றன. இதன் சொற்கட்டு "தெய்ஹத் தெய்ஹி" ஆகும். இந்த அடவின் முக்கிய அம்சம் ஒரே மாதிரியான காலசைவும் வெவ்வேறான கையசைவும் கொண்டிருப்பது ஆகும்.

## தாதெய் தெய்தத் அடவு

இந்த அடவில் சுவஸ்திக நிலைகள் கூடுதலாகக் காணப்படுகின்றன. இவை நான்கு வகைப்படும். யாவும் ஆதிதாளத்திலேயே ஆடப்படுகின்றன. இதன் சொற்கட்டு "தாதெய் தெய் தத் தித்தெய் தெய்தத்" எனப்படும்.

## தெய்யா தெய்யி அடவு

இந்த அடவில் முதலாம் அடவு அரைமண்டி நிலையிலும் ஏனையவை சமநிலையிலும் [ஸ்தானதப்] பயிற்சி செய்யப்படுகின்றன. ஆதிதாளத்தில் இடம்பெறும் இந்த அடவுகள் நான்கு வகைப்படும்.

## தத்தெய்தாம் அடவு

இந்த அடவு பலவித மண்டல நிலைகளையும், பாதபேதங்களையும் உள்ளடக்கியதாக விளங்குகின்றது. ஆறு அடவுகளைக் கொண்ட இவை யாவும் ஆதிதாளத்திலேயே இடம்பெறுகின்றன. இந்த அடவின் சொற்கட்டு "தத்தெய்தாம் தித்தெய்தாம்" எனப்படும். இந்த அடவு அழகான பல நிலைகளைக் கொண்டிருப்பதுடன் வித்தியாசமான செய்கை முறைகளையும் அறிமுகப்படுத்துகின்றது.



## தத்தெய் தாஹா அடவு

இது ஒரு வல்லினமான அடவாகும். பரதநாட்டியக் கச்சேரி உருப்படிகளில் நிருத்தப்பகுதிகளை உள்ளடக்கிய சகல நிகழ்ச்சிகளிலும் இந்த அடவு இடம்பெறுகிறது. நான்கு வகையான இந்த அடவுகளில் முதலாம் அடவு, ரூபகதாளத்திலும் ஏனையவை ஆதிதாளத்திலும் ஆடப்படுகின்றன. இந்த அடவில் திரிபதாக முத்திரையொன்றே பாவிப்பது குறிப்பிடத்தக்கது. இந்த அடவின் சொற்கட்டு "தத்தெய்தாஹா தித்தெய்தாஹா" எனப்படும்.

## முழுமண்டி அடவு

இந்த அடவில் பெரும்பான்மையான பகுதி முழுமண்டியில் செய்வதால் இது முழுமண்டி அடவு எனப்படுகிறது. இதில் நான்கு அடவுகள் உள்ளன. யாவும் ரூபகதாளத்திலேயே ஆடப்படுகின்றன. இவ் அடவுக்குரிய சொற்கட்டு "தாங்கிடு தத்த தின்ன" என்பதாகும்.

## தித் தெயிந்த அடவு

இந்த அடவுகளில் பாதபேதங்களில் ஒன்றான உத்பிலவன நிலை பெரும்பாலும் இடம்பெறுகின்றன. ஆதி தாளத்தில் ஆடப்படும் இந்த அடவுகளின் எண்ணிக்கை மூன்றாகும். இந்த அடவின் சொற்கட்டு "தித்தெயிந்தத் தாதெய்" எனப்படும்.

## தெய்தெய் தத்தா அடவு

ஆதிதாளத்தில் ஆடப்படும் இந்த அடவுகளின் எண்ணிக்கை மூன்றாகும்; இதன் சொற்கட்டு "தெய் தெய் தத்தா தித்தெய் தத்தா" எனப்படும்.

## சறுக்கல் அடவு

கால்களை முழுமண்டியில் இருந்து பின்னோக்கி சறுக்குவதால் சறுக்கல் அடவு எனப்பெயர் பெற்றது. ஒரேயொரு அட

வைக் கொண்ட இந்த அடவு ரூபகதாளத்தில் ஆடப்படுகின்றது. இதன் சொற்கட்டு ''தாங்கிடு தத்தத் தின்ன'' என்பதாகும்.

## தித்தித் தெய் அடவு

இந்த அடவுகள் மூன்று வகைப்படும். யாவும் ரூபகதாளத்திலேயே பயிற்சி செய்யப்படுகிறன்றன. இதன் சொற்கட்டு ''தித்தித் தெய்'' எனப்படும்; திஸ்ர சொற்கட்டுகளுக்குகந்த அடவு இதுவாகும்.

## உத்ஸங்க அடவு

உத்ஸங்க முத்திரையுடன் ஆடப்படும் இந்த அடவு ஆதிதாளத்தில் பயிற்சி செய்யப்படுகிறது. இதன் சொற்கட்டு தக்கதிமி என்பதாகும். இது பிரிவுகளற்ற தனி அடவாகும்.

## தெய்தெய் தித்தித் தெய் அடவு

பதாகம், அலபத்மம் ஆகிய முத்திரைகளுடன் இடம்பெறும் ஒரேயொரு அடவு இதுவாகும். ஆதிதாளத்தில் ஆடப்படும் இந்த அடவின் சொற்கட்டு ''தெய்தெய் தித்தித் தெய்'' ஆகும்.

## தெய்தெய் தித்தித் தெய்தாம் அடவு

இந்த அடவின் ஜதிச்சொற்கட்டு ''தாஹத்த ஜெம்தரி தாம் ஜெம்தரி ஜெகதரி தெய்'' எனப்படும் தீர்மான அடவுகளில் ஒன்றான இந்த அடவு ரூபகதாளத்தில் ஆடப்படுகின்றது. இந்த அடவிலும் பிரிவுகளில்லை. தனியொரு அடவே இடம்பெறுகிறது.

## ததிங்கிணத் தொம் அடவு

இந்த அடவு கோர்வைகள் தீர்மானங்கள் யாவற்றிலும் இறுதியடவாக இடம் பெறுகின்றது. இது ரூபகதாளத்தில் பயிற்சி செய்யப்படுகின்றது. இதன் ஜதிச்சொற்கட்டு ''ததிங்கிண தொம் தக ததிங்கிண தொம் தகதிகு ததிங்கிண தொம்'' என்பதாகும். இதன் அடவுச் சொற்கட்டு தெய் திதி தெய், தெய்தெய் திதி தெய், தெய்தெய்தெய் திதி தெய்'' எனப்படும்.



## கிடதகதரிகிட தொம்

இந்த அடவும் கோர்வைகள் தீர்மானங்கள் யாவற்றிலும் இறுதி அடவாக இடம்பெறுகிறது. ரூபகதாளத்தில் ஆடப்படும் இந்த அடவின் சொற்கட்டு ''தெய் தித்தித் தெய், தெய்தெய் தித்தித் தெய், தெய்தெய்தெய் தித்தித் தெய்'' எனப்படும். இதன் ஜதிச்சொற்கட்டு 'கிட தக தரி கிட தொம், தக கிட தக தரி கிட தொம் தக திகு கிட தக தரி கிட தொம்'' எனப்படும்.

## தட்டு மெட்டடவு

இந்த அடவு பஞ்சநடைகளில் செய்யப்படுகிறது: கால்களை தட்டி மெட்டுவதால் இந்த அடவு தட்டுமெட்டடவு எனப்பெயர் பெற்றது. இந்த அடவு நிருத்தப்பகுதிகளில் அதிகம் இடம்பெறாமல் பரதநாட்டியக் கச்சேரி உருப்படிகள் சிலவற்றில் சாகித்திய அடிகளை அபிநயிக்கும் போது இடம்பெறுவது குறிப்பிடத் தக்கது

## முத்திரைகள்

பரதநாட்டிய இலட்சணைங்களில் ஒன்றான பாவத்தை அபிநயத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றோம். இந்த அபிநயம் இடைவிடாது பெருகிவரும் உணர்ச்சிப் பெருக்கை வெளிப்படுத்தும். சொல்லற்ற சிறப்பு மொழியாக கருதப்படுகின்றது. இச்சிறப்பு மொழியை புரிந்து கொள்வதற்கு துணையாக ஏற்பட்ட அபிநயக்கைகள் முத்திரைகள் என வழங்கப்பட்டன. அத்துடன் நடனத்தின் நிருத்தப் பகுதியை அழகூட்டுவதற்காகவும் இந்த முத்திரைகள் பயன் படுத்தப்பட்டன. அதாவது கைகளினால் வெளிப்படுத்தும் நடனத்தின் மொழியாக முத்திரைகளைக் குறிப்பிடலாம். இந்த முத்திரைகள் சமஸ்கிருதத்தில் ''ஹஸ்தங்கள்'' என்று சொல்லப்பட்டிருக்கின்றன. கைகளிலுள்ள விரல்களின் நிலைமாற்றத்தால் இந்த முத்திரைகள் உருவாகின்றன. இந்த முத்திரைகளை ஆடல் ரீதியாக இருபகுதிகளாகப் பிரிக்கலாம். அதாவது கருத்துக்களை விளக்கும் முத்திரைகளை ''தொழிற்கை'' என்றும் அடவு கரணங்களில் அழகுக்காக பாவிக்கும் முத்திரைகளை ''எழிற்கை,, என்றும் வகைப்படுத்தலாம். சிலப்பதிகாரத்தின் உரையில், அடியார்க்கு நல்லார் தந்திருக்கும் மேற்கோள்களில் அபிநயத்தில் வருவது தொழிற்கையென்றும் ஆட்டத்தில் வருவது எழிற்கையென்றும் மிகப்பொருத்தமாய் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் இந்த முத்திரைகளை, பயன்படுத்தும் அமைப்பு ரீதியாக, நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன அஸம்யுத ஹஸ்தம், ஸம்யுத ஹஸ்தம், சமான ஹஸ்தம், மிஸ்ர ஹஸ்தம் எனப்படும்; ஒற்றைக்கையால் பிடிக்கும் முத்திரைகளை அஸம்யுத ஹஸ்தம் என்றும் இரண்டு கைகளையும் இணைப்பதால் உருவாகும் முத்திரைகளை ஸம்யுத ஹஸ்தங்களென்றும்; ஒரு முத்திரையைக் கொண்டு பல்வேறு கருத்துக்களை தெரிவித்தல் சமான ஹஸ்தம் எனவும், இருகைகளில் வித்தியாசமான இருமுத்திரைகளைக் கொண்டு ஒருபொருளை விளக்குதல் மிஸ்ர ஹஸ்தம் எனவும் கூறப்படுகிறது.

இந்த முத்திரைகளின் பிரயோகத்தால் கருத்துக்களைப் புரியவைப்பது விநியோகம் எனப்படும். ஒவ்வொரு முத்திரைகளின் விநியோகங்களும் பல கருத்துக்களை விளக்குகின்றன. இவற்றுடன் தேவர்களையும், தெய்வங்களையும் குறிக்கும் தேவ ஹஸ்தங்கள், திருமாலின் பத்து அவதாரங்களையும் குறிக்கும் தசவதார ஹஸ்தங்கள்; ஜாதி, பேதங்களைக் குறிக்கும் ஜாதி ஹஸ்தங்கள்; உறவு முறைகளைக் குறிக்கும் பாந்தவ்ய ஹஸ்தங்கள், நவக்கிரகங்களைக் குறிக்கும் நவக்கிரஹ ஹஸ்தங்கள் இப்படியாக பறவைகள், மிருகங்கள் யாவும் இந்த முத்திரைகளின் அபிநயத்திலே தான் உருவகிக்கப்படுகின்றன.

மேற்கூறிய விளக்கங்களின் படி நடனத்தில் முத்திரையின் பங்கு, அதன் சிறப்பு, பிரயோகத்தால் ஏற்படும் உருவக விளக்கம் யாவும் நன்கு தெளிவாகின்றன. இந்த முத்திரைகளின் தொழிற்பாட்டையும் அமைப்பையும் நடனத்தில் இலக்கண நூல்கள் மூலம் புரிந்துகொள்ளலாம். இருப்பினும் ஒரு திறமைவாய்ந்த ஆசிரியரிடம், நேரிடையாக செய்முறைப் பயிற்சிமூலம் தெரிந்து கொள்வதே சாலச்சிறந்தது ஆகும்.

## அஸம்யுத ஹஸ்தங்கள் (ஒற்றைக்கை முத்திரைகள்)

தமிழில் ஒற்றைக்கை முத்திரைகள் எனவும் சமஸ்கிருதத்தில் அஸம்யுத ஹஸ்தங்கள் எனவும் அழைக்கப்படும் இந்த முத்திரைகள் ஒற்றைக்கையினால் செய்வதால் இப்பெயர் பெற்றது. ஒரு கையில் உள்ள விரல்களின் நிலை மாற்றத்தால் உருவாகும் இந்த முத்திரைகள் இருபத்து எட்டு வகைப்படும்: பதாகத்தில் ஆரம்பித்து திரிசூலத்தில் முடிவடையும் இந்த முத்திரைகளில் பறவைகள் மிருகங்கள் ஆகியவற்றை உருவகிக்கும் முத்திரை



களும் அடங்குகின்றன. கருத்துக்களை உணர்த்தும் இந்த முத்திரைகள் அபிநயப்பகுதிக்கு மாத்திரமல்ல நிருத்தப்பகுதியில் அடங்கும் அடவுகளை உருவாக்குவதிலும் பெரும் பங்கு வகிக்கின்றன. பரதக்கலையின் "அ" "ஆ" வாக கருதப்படும் இந்த முத்திரைகள் அக்கலையை மெருகேற்ற பெரிதும் உதவுகின்றன:

பதாகஸ் திரிபதாகோ அர்த்தபதாகஸ் கர்த்தரி முகஹ
மயூராக்யோ அர்த்த சந்திரஸ்ச அறால சுகதுண்ட சஹ
முஷ்டிஸ்ச சிகராகியஸ்ச கபித்த கட ஹாமுகஹ
சூச்சி சந்ரகலா பத்ம கோஷ ஸர்பசிரஸ்ததா
ம்ருஹசீர்ஷ ஸிம்ஹமுகஹா காங்கூலஸ்ச அலபத்மகஹா
சதுரோ ப்ரமரஸ் சைவ ஹம் ஸாஸ்யோ ஷப்ஸபக்ஷகஹா
ஸம்தம் ஸோ முகுலஸ் சைவ தாம்ரசூட த்ரிசூலக ஹா

## ஒற்றைக்கை முத்திரைகள் 28

1. பதாகம்
2. திரிபதாகம்
3. அர்த்தபதாகம்
4. கர்த்தரிமுகம்
5. மயூரம்
6. அர்த்த சந்திரன்
7. அராளம்
8. சுகதுண்டம்
9. முஷ்டி } மூன்று முறை
10. சிகரம் } மூன்று முறை
11. கபித்தம் } மூன்று முறை
12. கடகாமுகம்
13. ஸூசி
14. சந்திரகலா
15. பத்மகோசம்
16. சர்ப்பசிர்ஷம்
17. மிருகசிர்ஷம்
18. சிம்ஹமுகம்
19. காங்கூலம்
20. அலபத்மம்
21. சதுரம்
22. பிரமரம்
23. ஹம்ஸாஸ்யம்
24. ஹம்ஸபக்ஷம்
25. ஸம்தம்சம்
26. முகுலம்
27. தாம்ரசூடம்
28. திரிசூலம்

## ஸம்யுத ஹஸ்தங்கள் (இரட்டைக்கை முத்திரைகள்)

தமிழில் இரட்டைக்கை முத்திரைகளென அழைக்கப்படும் இந்த முத்திரைகள் சமஸ்கிருதத்தில் "ஸம்யுத ஹஸ்தம் என்று அழைக்கப்படுகின்றன. இருகைகளை இணைப்பதன் மூலமும் ஒற்றைக்கை முத்திரைகளை இருகைகளிலும் பிடித்து இணைப்பதன் மூலமும் இந்த முத்திரைகள் உருவாகின்றன, இந்த முத்திரைகள் இருபத்துநான்கு வகைப்படும். இந்த முத்திரைகளின் பிரயோகங்களினால் கருத்துக்களை விளக்கும் பல விநியோகங்கள் உருவகிக்கப்படுகின்றன.

அஞ்சிலிஸ்ச கபோதஸ்ச கர்கட ஸ்வஸ்திகஸ்ததா
டோலாகஸ்தா புஷ்பபுடஹா உத்ஸங்க ஷிவலிங்ககஹா
கடகாவர்த்தன ஸ்சைவ கர்த்தரீஸ்வஸ்தி கஸ்ததாஷகடம்
சங்க சக்ரேச்ச சம்புடல்பாச கிலஸெள
மத்ஸய கூர்மோ வராகஸ்ச கருடோ
நாகபந்தகஹ கட்வ பேருண்டகாகியஸ்ச அவஹித்தஸ்தநைலச

## இரட்டைக்கை முத்திரைகள் - 24

1. அஞ்சலி
2. கபோதம்
3. கர்க்கடம்
4. சுவஸ்திஹஸ்தம்
5. டோலம்
6. புஷ்பபுடம்
7. உத்ஸங்கம்
8. சிவலிங்கம்
9. கடகாவர்த்தனம்
10. கர்த்தரிஸ்வஸ்திகம்
11. சகடம்
12. சங்கம்
13. சக்கரம்
14. சம்புடம்
15. பாச
16. கிலகம்
17. மத்ஸயம்
18 கூர்மம்
19. வராகம்
20. கருடன்
21. நாகபந்தம்
22. கட்வா
23. பேருண்டம்
24. அவஹித்தம்

## பரதநாட்டிய பயிற்சி அடவுகளும் அதன் சொற்கட்டுகளும் அதற்குரிய தாளங்களும் அடவுகளின் எண்ணிக்கைகளும்

| அடவு | சொற்கட்டு | தாளம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. தட்டடவு | ஒவ்வொரு அடவுகளுக்கும் குறிப்பிடப்பட்ட சொற்கட்டுகள் உண்டு. | 3-ம் 8-ம் ரூபகம் ஏனையவை ஆதி தாளம் | 8 |
| 2. நாட்டடவு | தெய்யும்தத்தத்தெய்யும்தாம் | ஆதிதாளம் | 8 |
| 3. குதித்து மெட்டடவு | தெய்ஹத் தெய்ஹி | ஆதிதாளம் | 4 |



| அடவு | சொற்கட்டு | தாளம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 4 தா தெய் தெய் தத் அடவு | தாதெய் தெய்தத் தித்தெய் தெய்தத் | ஆதிதாளம் | 4 |
| 5 தெய்யா தெய்யி அடவு | தெய்யா தெய்யி | ஆதிதாளம் | 4 |
| 6 தத் தெய் தாம் அடவு | தத்தெய் தாம் தித்தெய் தாம் | ஆதிதாளம் | 6 |
| 7 தத்தெய் தாஹா அடவு | தத்தெய் தாஹா தித்தெய் தாஹா | 7-ம் அடவு ரூபகம் ஏனையவை ஆதி | 4 |
| 8 முழமண்டி அடவு | தாங்கிடு தத்தத் தின்ன | ரூபகம் | 4 |
| 9 தித் தெயிந்த அடவு | தித்தெயிந்தத் தாதெய் | ஆதிதாளம் | 3 |
| 10 தெய்தெய் தத்தா அடவு | தெய்தெய் தத்தா தித்தெய் தத்தா | ஆதிதாளம் | 3 |
| 11 சறுக்கலடவு | தாங்கிடு தத்த தின்ன | ரூபகம் | 1 |
| 12 தித்தித் தெய் அடவு | தித்தித் தெய் தித்தித் தெய் | ரூபகம் | 3 |
| 13 உத்ஸங்க... | தக்க திமி தக்க திமி | ஆதிதாளம் | 1 |
| 14 தெய்தெய்தித் தித் தெய்... | தெய்தெய் தித்தித் தெய் | ஆதிதாளம் | 1 |
| 15 தெய் தெய் தித் தித் தெய் தாம் அடவு | தாஹத்த ஜெம்தரி தாம் ஜெம்தரி ஜெகதரி தெய் | ரூபகம் | 1 |

| அடவு | சொற்கட்டு | தாளம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 16 ததிங்கிண தொம் அடவு | ததிங்கிண தொம் தக ததிங்கிணதொம் தகதிரு ததிங்கிண தொம் | ரூபகம் | 1 |
| 17 கிடதக தரிகிட தொம் ... | கிடதக தரிகிட தொம் தக கிடதக தரிகிட தொம் தகதிகு கிடதக தரிகிட தொம் | ரூபகம் | 1 |
| 18 தட்டு மெட்டு அடவு | தகிட | திஸ்ரம் | |
| | தகதிமி | சதுஸ்ரம் | |
| | தக தகிட | கண்டம் | |
| | தகிட தகதமி | மிஸ்ரம் | |
| | தக தகிட தகதிமி | சங்கீர்ணம் | |



# அநுபந்தம்

## தெய்வமாக் கலை

[அமரத்துவம் அடைந்த ஸ்ரீமதி பாலசரஸ்வதி அரங்கேறி ஐம்பதாவது பொன்விழா ஆண்டில் தமிழிசைச் சங்கத்தினால் நடாத்திய இசைவிழாவில் அபிநயஅரசி ஆற்றிய தலைமையுரையிலிருந்து சில பகுதிகள்]

நான் அறிந்த அளவில் பரதக்கலை என்பது தான் பக்தி. தமிழ் என்பதும் பக்தியன்றி வேறில்லை. எனவே தமிழ் மரபும் பரத மரபும் ஒன்றே என உணர்கிறேன்.

சிலப்பதிகாரத்தில் பேசப்படும் கொடு கட்டி முதல், கடையம் ஈறான பதினொரு வகைக் கூத்துக்களும் சிவபெருமான், திருமால், முருகன், காமன், கொற்றவை எனப்படும் பராசக்தி திருமகள், இந்திராணி ஆகிய தெய்வங்கள் புரிந்த ஆடல்களாகும். தீமையை வென்று நன்மையை நிலைநாட்டு முகமாக ஒவ்வொரு தெய்வமும் அசுர சம்ஹாரம் செய்து வெற்றி கண்டதையே இப்பதினொரு ஆடல் வகைகளும் விளக்குகின்றன. தீய சக்திகளை தீய்த்து தூய ஆன்மநெறியை தழைக்கச் செய்யும் தெய்வமாக் கலையாகவே தமிழரால் நாட்டியம் கொள்ளப்பட்டிருப்பதற்கு இதைவிடச் சான்று வேண்டுமா?

துச்சமானது என்று கருதப்படும் சரீரத்தையே தெய்வீகமாக்குவது தான் பரதக்கலை. யோகிகள் மூச்சை அடக்கியும் காயக்கிலேசம் செய்தும் தங்கள் மேனியையே தெய்வீகத் திருமூர்த்தம் ஆக்கிக்கொள்கின்றனர் எனில் ஒரு நடிகையானவள் லயத்தாலும் பண்ணாலுமே அவற்றில் எந்த அளவுக்கு ஊறிக் கரைந்து ஐக்கியப்பட்டிருக்கிறாளோ அந்த அளவுக்கு ஆடல்புரிகின்ற அந்தக்காலத்தில் மட்டுமாவது தன் உடலையே தெய்வீகராஸானு பாவங்களின் கருவியாக்கிக் கொள்கிறாள்.

சம்பிரதாயமாக அமைந்துள்ள பரதக்கச்சேரிக் கிரமமான அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம், பதங்கள், தில்லானா, பதிகம், பாசுரம் அல்லது சுலோகம் என்ற அமைப்பு முறையே மேற்சொன்னவாறு தேகத்தால் தெய்வீகத்தை மலர்த்தும் கால யோக ஸாதனையின் ஒழுங்கான படிவரிசை என்றே கருதுகிறேன்;

இந்த அமைப்பைக் கலைக்கண் நோக்கிலேயே பார்த்தால் அதன் சிறப்புத் தெரியும். முதலில் லயம் மட்டும் கொண்ட அலாரிப்பு ஒருமுகப்பட வைப்பதில் லயத்துக்கு ஒருதனி ஆற்றல் உண்டு. லயிக்கவைப்பதால் தான் அதற்குப் பெயரே லயம். நடியின் சித்தம் பலவாறாக சிதறாமல் ஒரு முகப்பட அலாரிப்பு பேருதவி புரிகிறது.

முதலில் தனியான லய இன்பம் பிறகு அதனோடு பண் இன்பமும் கலந்த ஜதிஸ்வரம். மொழியும் சொல்லும் இல்லாத வெறும் இசைக்கே நம்மைத் தன்னோடு இசைத்துக் கொள்ளும் சக்தி உண்டு. அது ஜதிஸ்வரத்தில் ஆடலோடு கலந்து வருகிறது. பிறகு சப்தம் இங்கேதான் பரதநாட்டியத்திற்கே உரித்தான பலவித ரஸங்களைக் காட்டச் சொல்லும், பொருளும் கொண்ட சாகித்தியமும் வந்து சேருகிறது.

மகத்தானதோர் ஆலயம் போல் நிர்மாணிக்கப்பட்ட பரதக் கச்சேரிக் கிரமத்தில் அலாரிப்பு என்ற கோபுரவாயில் வழியே பிரவேசித்து ஜதிஸ்வரம் என்ற அர்த்தமண்டபத்தையும் சப்தம் என்ற மகாமண்டபத்தையும் கடந்து வந்தால், புனிதத்திலும் புனிதமான தெய்வ சன்னிதானத்தில் வர்ணம் வருகிறது. இது லய ஜதிகளாக கொட்டவும், பாவ அபிநயங்களைப் பொழியவும் விஸ்தாரமாக இடம் கொடுக்கும் சந்நிதானமாகிறது.

வர்ணத்தை தொடர்ந்து வருவது பதங்கள் சந்நிதியிலிருந்து கர்ப்பக்கிரகத்துக்குள்ளே புகுந்தவுடன் ஏற்படும் ஓர் அடக்கம் குளிர்ச்சி, அமைதி இந்தப் பாதங்களுக்கு அபிநயம் புரியும்போது ஏற்படுகிறது. சன்னிதானத்தின் வெளிச்சுற்றிலே இருந்த விஸ்தாரமும் ஜாஜ்வல்யமும் கருவறைக்குள் அடங்கிவிடுவது போல வர்ணத்தின் லயக்கொழிப்புகளும் அடங்கி நெஞ்சைக் கவ்வும் இசையோடு அபிநயம் இங்கே இழைந்து வருகின்றது. அடுக்கு தீபாராதனைகளும், மேளதாளங்களும் நின்று ஆண்டவன் பக்கத்தில் வெறும் மறை மந்திரங்கள் மட்டும் ஓதப்படுவது போன்ற ஒரு உணர்வை பதங்கள் ஆடும்பகுதி உணர்த்துகிறது. பின் இறைவனுக்கு நேர் முன்னரே ஆரவாரமணி ஒலிகளுடன் கற்பூர ஆராத்தி காட்டுவது போல தில்லானா இடம்பெறுகிறது. இறுதியாக புறத்தில் வழிபடும் இறைவனை அகத்துள் இறக்கிக் கொள்வது போல சாத்வீக உணர்வுகளுடன் எமைமறந்து இறைஉணர்வில் இழைந்து அபிநயிப்பதற்கேற்ப விருத்தமாக அமைந்த பக்தி பாடலுடன் நாட்டியக் கச்சேரி நிறைவு பெறுகின்றது.



இங்கு தெய்வசந்நிதானமும் தெய்வீக நடனக்கலையும் ஒன்றிலொன்று லயித்து பூரணத்துவமடைவதை நாம் உணரமுடிகின்றது. அத்துடன் அபிநயம் பற்றி சிலவார்த்தைகள் கூறலாம் என நினைக்கின்றேன்.

அபிநய உணர்ச்சிகளில் சிருங்காரம் தலையாய இடத்தைப் பெறுகிறது. ஏனெனில் ஜீவாத்மா பரமாத்மாவுடன் சேருவதற்கு சிருங்காரத்தை விட சிறந்த உருவகம் இல்லையென்றே கூறலாம். சிருங்காரம் கலவாத உருக்கமான பக்தி ததும்பும் "எந்நேரமும் உற்றன் சந்நிதி" "வருசலாமோ" காந்திமதி பிள்ளைத்தமிழ், தாயுமானவர் பாடல்கள், "கிருஷ்ணா நீ பேகனே பாரோ" முதலிய பாடல்களில் கரைந்து அபிநயத்தில் ஆழ்ந்த அநுபவத்தை அறிந்த நானே தான் இப்படிச் சொல்கிறேன். சிருங்காரத்தின் ஸ்தாயி பாவமான அன்பு உயிர்களிடத்தும் இறைவனிடத்தும் எம்மை ஐக்கியமாக்கும் பெருமை மிக்கது. பிறவியின் பயனை அடையச் செய்யும் இந்த அற்புதக் கலை "தெய்வமாக்கலை" என்று சொன்னால் மிகையாகாது.

## நடன உட்பிரிவுகள்

நடனத்தின் ஆடல்முறைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அதாவது கருத்துக்களற்ற தாளத்தை மையமாகக் கொண்டு ஆடப்படும் ஆடல்; கருத்துக்களை ஆடலுடன் விளக்கும் அபிநயம் கடந்த ஆடல் பாத்திரங்களின் தன்மையை உணர வைக்கும் நாடகவடிவிலான ஆடல் என மூன்று நடன உட்பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன.

இந்த நடன பிரிவுகளின் முதலிரு பகுதிகளையும் தனியொருவராகவோ அல்லது பலர் ஒன்றுசேர்ந்தோ ஆடமுடியும். ஆனால் மூன்றாவது பகுதி: பலநடன பாத்திரங்களின், ஒழுங்கமைப்பிலும் தான் நடனவடிவம் பெறுகிறது.

அழகுணர்வை, அங்க சுத்தத்துடன் வெளிப்படுத்தும் ஆடல் நிருத்தம் என்றும் ஆத்மிக உணர்வை, அபினய விளக்கத்துடன் வெளிப்படுத்தும் ஆடல் நிருத்தியம் என்றும் நவரஸங்களை, ஒவ்வொரு பாத்திரங்கள் மூலமும் நயமாக வெளிப்படுத்தும் நாடக வடிவிலான ஆடல் நாட்டியம் என்றும் வகுக்கப்பட்டுள்ளது.

**நிருத்தம்:** கருத்துக்களற்ற அழகிய உடல் அசைவுகளைக் கொண்ட ஆடல்பகுதி நிருத்தம் எனப்படும். நிருத்த ஆடலில் உடலின் எல்லா உறுப்புகளும் அழகுற இயங்குகின்றது. தெளிவான அங்கசுத்தத்துடன் அடவுகள் என்ற வடிவத்தில் ஆரம்பிக்கப்படும் நிருத்தப்பயிற்சி, பின் கோர்வைகள், தீர்மானங்கள் என்று மெல்ல தன்னை விரிவுபடுத்திக்கொள்கின்றது. அத்துடன் ஸ்வரம் சொற்கட்டுகள் இவற்றின் வல்லின, மெல்லினங்களை அவற்றிற்குரிய அடவுகளின் மூலம் அழகாக உருவகப்படுத்துகின்றது. தாளக்கூறுகளின் நுண்ணிய அமைப்பையும், அதன் செறிவையும், உடலின் நெளிவு சுளிவுகளையும், விரிவான பாத வேலைப்பாடுகளையும், கையசைவுகளையும் தெளிவாக விளக்குகின்றது. கருத்துக்கள் அற்ற சொற்கட்டுகளுக்கு தாளத்தினை மையமாகக்கொண்டு ஆடப்படும் இந்த ஆடல் அழகுணர்வையும் ஆடலின் தரத்தையும் மிகைப்படுத்த வல்லது. தூயநிருத்த ஆடலுக்கு நாட்டியக் கச்சேரி உருப்படிகளான அலாரிப்பு, ஜதிஸ்வரம் ஆகிய உருப்படிகளை உதாரணமாகக் கொள்ளலாம்.

**நிருத்தியம்:** நிருத்த ஆடலுடன் கருத்துக்களை வெளிப்படுத்தும் அபிநயம் இணையும் பொழுது நிருத்தியம் உருவாகின்றது. அதாவது கருத்துக்களை விளக்கும் ஆடல்வகை நிருத்தியம் எனப்படும். பாட்டின் பொருளுக்கேற்ப உணர்வுகளை வெளிப்படுத்துவதோடு, அதன் கருத்துக்களை விளக்கும் அபிநயங்களை இயக்கியவண்ணம், பாதங்களையும் ஆடலின் தன்மைக்கேற்ப இயங்க வைப்பது நிருத்தியத்தின் இயல்பாகும். தூய நிருத்தியத்திற்கு சமமாகவும், அதே வேளையில் ஆழமாகவும் உணர்த்தவல்ல நாட்டியக்கச்சேரி உருப்படிகளில் ஒன்றான வர்ணத்தினை உதாரணமாகக் கொள்ளலாம்.

**நாட்டியம்:** கதையை அடிப்படையாகக் கொண்டு அக்கதை கதாபாத்திரங்களை தனித்தனியாக சித்தரித்து ஆடுதல் நாட்டியம் எனப்படும். கீதம், வாத்தி



யம், நடனம் இவை மூன்றும் இணைந்து கதையை மையமாகக் கொண்டு, பாத்திரங்களின் தன்மைக்கேற்ப நவரஸ உணர்வுகளை வெளிப்படுத்தும் இந்த நாட்டியம் தனி ஒருவரால் ஆடப்படும் நடனமல்ல. பலர் சேர்ந்து கதைக்குரிய பாத்திரங்களுக்கேற்ற நடை, உடை, பாவனைகளையும் ஒப்பனைகளையும் வேறுபடுத்தி அந்தந்த பாத்திரங்களாகவே தங்களை உருவகப்படுத்தி ஆடுதல் நாட்டியத்தின் முக்கிய அம்சமாகும். நாட்டியத்தில் பெரும்பாலும் புராண இதிகாசக்கதைகளே முக்கிய இடம் வகிக்கின்றன.

## பரதநாட்டிய உடை அலங்காரங்கள்

நடனம் ஆடும் பெண்ணின் அங்க அசைவுகள், தெளிவாகவும் அதே வேளையில் உடல் உறுப்புக்களின் அசைவுகள் தடைப்படாமல் தொடர்ந்து இயங்கவும் உகந்த முறையில் உடை அலங்காரங்கள் அணியப்படுகின்றன. அத்துடன் அங்க இலட்சணங்களை ஆபாசமின்றி எடுத்துக் காட்டவும், அழகினைக் கூட்டவும் அரங்கத்திற்கேற்ற, நடனப் பெண்ணின் உடலுக்குத் தகுந்த, அழகிய பலவர்ண நிறங்களில் ஜரிகை வேலைப்பாட்டுடன் கூடிய பட்டுச்சேலை அணிவர்.

### நடனப்பயிற்சி உடை:

சிறிய மாணவிகள் காலை மூடிய பைஜாமாவும், வளர்ந்த மாணவிகள் பைஜாமாவுடன் அதன் மேல் கச்சை கட்டிக்கொள்ள ஒன்பது கஜம் சேலையும் அணிவர்.

## பரதநாட்டியக் கச்சேரி உடை

மேடைக்கும் மாணவிக்கும் ஏற்ற முதல் வர்ணங்களில் அழகிய வேலைப்பாடமைத்த சேலை இங்கு நடன உடையாக அணியப்படுகின்றது. காலை மூடும் பைஜாமாவுடன் கச்சை கட்டிக்கொள்ள 9 கஜம் சேலை அணிவர். முழங்கைவரை இரவிக்கையும் முழங்கால் வரை சேலையும் அணிவர். அதன் தலைப்பு முன்னால் விசிறியமைப்பில் சொருகப்பட்டிருக்கும். தற்போது ஆடைகளை விசிறிய மடிப்போடு அழகாக தைத்து உடுக்கும் பழக்கம் வந்துவிட்டது. அங்க லட்சணங்களை ஆபாசமின்றி அழகாக எடுத்துக்காட்டவும், சுலபமாக ஒன்றுக்கு மேற்பட்ட

ஆடைகளை மாற்றவும் இந்த முறை பயனளிக்கின்றது. ஆனால் பிரசித்திபெற்ற "கலாஷேத்ரா" நடன ஆலயத்தில் முழங்காலுக்கு சற்று கீழான அமைப்பில் சேலை அணியப்படுவது குறிப்பிடத் தக்கது.

## பரதநாட்டிய கச்சேரி நிகழ்ச்சியில் தலையிலிருந்து கால்வரை தற்போது பயன்படுத்தும் நகை வகைகள்.

தலை: ராக்கொடி, சுட்டி, சந்திரன், சூரியன், நாகர், ஜடைநாகம், பின்னல் நுனியில் குஞ்சலம்.


முகம்: காதில் தோடு, ஜிமிக்கு மாட்டல்; மூக்கில், மூக்குத்தி, நத்து, புல்லாக்கு.

கழுத்து: அட்டிகை மற்றும் கீழ் கண்டவற்றுள் ஏதேனும் ஒன்றோ இரண்டோ முத்துஹாரம், மகரகண்டி பதக்கம், மாங்காய் மாலை, காசுமாலை, பதக்கம், சங்கிலி.


கையில்: புஜத்தில் வங்கி அல்லது, நாக்கொத்து அல்லது பாஜிபந்து; கையில் வளைகள் அல்லது கங்கணம் அல்லது பட்டைக்காப்பு, விரலில் மோதிரம்.

இடுப்பில்: ஒட்டியாணம் அல்லது (பெல்டு) மேகலை.


கால்களில்: சதங்கை, கொலுசு, மணமானவராக இருந்தால் மெட்டி.




படம் 1




படம் 2




படம் 3




படம் 4



படம் 5



படம் 6



படம் 7

---

## — பிழை திருத்தம் —

| பக்கம் | வரி | திருத்தம் |
|---|---|---|
| 06 | 29 | ... ஆடற்கலையை ''அரங்கேற்றிய பரதமுனிவரும்'' இறைவனின் ... |
| 12 | 20 | ... கர்ப்பம் தரித்த மெய், ''தடித்த மெய்'', ... |
| 13 | 17 | ... ஸ்ருதிகளிலிருந்து ''ஸ்வரங்களும் ஸ்வரங்களிலிருந்து'' ராகங்களும் ... |
| 29 | 21 | ... அபிநயம் ''கடந்த'' ... |
| 29 | 26 | ... ஒழுங்கமைப்பிலும் ''உணர்வுபூர்வமான ஒத்துழைப்பிலும்'' தான் ... |

தோற்றம்: 13 • 06 • 1956



சிவபதம்: 19 • 10 • 1991

# திருமதி கமலாவதி பரராஜசேகரம்

ஆண்டொன்று ஆகியதே!
ஆறியதே உன் நினைவு
தூண்டாமணி விளக்கே
தூயவளே துணை எமக்குன்
தூண்டு மொளிப் பார்வையிலே
துலங்குகின்ற பாசமன்றோ.

குடும்பத்தினர்